


B. S. SARMA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதியதோர் செய்தி

உங்கள் கலர் படச்சுருள்களை கழுவிக்கொள்ள அதிக பணம் விரயமாகின்றதா? அல்லது உங்கள் கலர்படச் சுருள்களை பிரதி எடுப்பதற்கு கொழும்பு செல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றதா? இவற்றைத் தவிர்த்துக்கொள்ள நாடவேண்டிய இடம்

## SHABRA

கலர் படச்சுருள் கழுவுதல் - முற்றிலும் இலவசம்

* 3 முதல் 5 நாட்களுக்குள் விநியோகம்
* நவீன கம்பியூட்டர் இயந்திரத்தில் பிரதி செய்யப்படும் தரமானபிரதிகள்
* ஸ்ருடியோக்களுக்கு விசேட சலுகையுண்டு
* கலர் பிரதி ஒன்றுக்கு 4/75 மட்டும்

எல்லா நாட்களிலும்: காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்

**விரையுங்கள்!** **விரையுங்கள்!**

பெற்றுகொள்ளும் நிலையம்:

# ஷப்ரு

207, மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்.
தொலைபேசி 22073

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பளிப்பு
B.S.சர்மா
10/01/89

வைகறை

# சேவைக்கு முந்திய ஆசிரியர் பயிலுனர் வெளியீடு

(1988 - 08 - 18 — 1988 - 09 - 06)

பயிற்சிப் புலம்,
யாழ். மத்தியகல்லூரி,
யாழ்ப்பாணம்,
1988 - 09 - 06.

சித்திரா அச்சகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைகறைக் குழு:

ஆசிரியர்:

மா. நவநீதமணி

துணையாசிரியர்:

இ. தேன்மொழியாள்
சோ. கலையரசி
சி. புஷ்பலதா
க. திலகவதி

ஆலோசகர்:

க. கனகசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்விப்பணிப்பாளர் வாழ்த்துகிறார்:

யாழ்ப்பாண மாவட்டத்தில் முதன் முதலாக ஆரம்ப ஆசிரிய சேவை முன் பயிற்சி எமது கல்லூரிகளில் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இது கல்வித்துறையில் ஒரு எழுச்சி மிக்க நிகழ்ச்சியாகும். யாழ் மத்திய கல்லூரியில் நடைபெறும் இப்பயிற்சி நெறியில் பங்குபற்றும் ஆசிரிய இளைஞர் மிக்க துடிப்புடனும் சேவையார்வத்துடனும் காணப்படுகின்றனர். இவர்கள் தமது தொழில்துறையில் அடியெடுத்து வைக்கும் இந்த நேரத்தில் வைகறை எனும் சஞ்சிகையின் மூலம், தமது படைப்புக்களை முன்வைக்கின்றனர்.

கல்வித்துறைக்கு இது போல் மேலும் பற்பல வழிகளில் தியாக உணர்வுடன் பணியாற்ற எல்லாம் வல்ல இறைவன் அருள் பாலிப்பானாக. அவர்களது இந்த நல்ல முயற்சிக்கு எனது ஆதரவையும் ஆசியையும் நல்குவதில் பெருமகிழ்ச்சி எய்துகிறேன்.

'ஓதுவது ஒழியேல் ஊக்கமது கைவிடேல்'

வெ. சபாநாயகம்
யாழ் பிரதேசக்கல்விப்பணிப்பாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிலைய மேற்பார்வையாளர் வாழ்த்துகிறார்

சேவைமுன் ஆசிரியப் பயிற்சி நெறிபெறும் இளைஞர் ''வைகறை''யை வெளியிடுவதை அறிய உளம் பூரிக்கிறது. இளைஞர் அறிவு, ஆற்றல் கற்பனை ஆகியவற்றுக்கு வடிகால் அமைய வேண்டும் அவ்விடத்தை வைகறை பெறுதல் சாலச் சிறந்தது.

ஆரம்பக்கல்வி இலங்கையின் வடபகுதியிலே கவனிப் பாரற்ற நிலையில் இதுவரை இருந்ததெனலாம். இப்போது அப்பகுதிச் சிறுவர்களின் கற்கைநெறியை வழிப்படுத்தி முன்னேற்ற நியமிக்கப்பட்ட இப்பயிற்சி மாணவர் சுமார் மூன்றுவாரப் பயிற்சியைப் பெறுபவராலுலும் மிக உயர்ந்த அறிவினையும் பயிற்சியினையும் பெற்றுச் செல்லும்போது தம்முடைய ஆக்கங்களை அச்சில் கண்டு மகிழும் வாய்ப்புக் கருத்துடையதே. கல்விக்கடலுக்குள் புகுந்தெடுக்கும் முத்துக்கள் அளவில, அவற்றைப் பொறுக்கிப் பயன் பெற்றுய்யும் வண்ணம் வாழ்த்து வழங்குகின்றேன்.

யாழ். மத்தியகல்லூரி.

வே. பாலசுந்தரம்,
நிலையமேற்பார்வையாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடஇணைப்பாளர் வாழ்த்துகிறார்:

எங்கள் பயிற்சி நிலையத்தில் கடந்த மூன்று வாரங்களாகப் பலதுறைகளிலும் ஆசிரியர்களுக்கான பயிற்சியைப் பெற்று வெளியேறும் ஆசிரியர்களும் ஆசிரியைகளும் சேர்ந்து வைகறை என்னும் சஞ்சிகையை வெளியிடுவதையிட்டுப் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

தொழில்சார் கல்வி, பொதுக்கல்வி, உடற்கல்வி, சங்கீதம், சித்திரம், நடனம், இலக்கியநயம் என்னும் சிறப்புறு துறைகளில் கற்பித்தல் முறைகளையும் செயல் திட்டங்களையும் நன்கு பயின்றதோடு, அவற்றின் பயனாக மிளிர்ந்த, கலைவிழா, கவியரங்கம், சித்திரம், கற்பித்தல் உபகரணக் கண்காட்சிகளிலும் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எல்லா நிகழ்ச்சிகளையும் சிறப்புறச் செய்துள்ளனர் எம் மாணவர் என, கல்விப்பணிப்பாளரும், பிரதம கல்வி அதிகாரியும் பாராட்டியிருப்பது எமக்கெல்லாம் பெருமை தருகிறது.

எமது நிலையத்தில் எம்முடன் சிறப்புடன் கடமையாற்றிய விரிவுரையாளர்கள் அனைவருக்கும், ஏனைய அலுவலர்களுக்கும் எனது நன்றியைக் கூறுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இப்பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் செல்லும் கல்லூரிகளில் சிறந்த சேவையாற்றி 'எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்' என்ற பொன் மொழிக்கேற்ப் புகழுடன் வாழ வாழ்த்துகின்றேன்.

யாழ் மத்தியகல்லூரி

க, சிவவிநாயகமூர்த்தி
பாட இணைப்பாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைகறை

---

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிற்கு.

---

''தொட்டனைத் தூறும் மணற்கேணி.........
..................... ..................... ...... அறிவு''
இது தமிழ்மறை.

கற்பித்தலும் அதற்கான பயிற்சியும் காலத்தின் தேவை. இது எமது பயிற்சிப்புலத்தில் நிகழ்ந்தது; நிகழ்த்தப்பட்டது அதன் ஓர் அங்கம் வைகறை.

பயிலுனர்களாகிய எமது படைப்பாற்றலை வெளிக்காட்ட வைகறை ஓர் தொடக்க முயற்சி.

பயிற்சிக்களத்தில் நாம்பெற்ற அநுபவங்கள் பல. குறுகிய காலத்தில் நிறைந்தபயன் தந்த விரிவுரையாளர்கள் என்றும் எம் உள்ளத்தில் உள்ளனர்.

வைகறை உருவாக ஆலோசனை வழங்கிய, எம்மை ஆற்றுப் படுத்திய 'இலக்கியநயம்' விரிவுரையாளர் திரு. க. கனகசிங்கம் அவர்களுக்கும், அட்டைப்படத்தை வரைந்துதவிய சித்திரவிரி வுரையாளர் திருமதி சிவசாந்தி புஷ்பநாதன் அவர்களுக்கும் அனைத்துவழிகளிலும் எம்மை ஆற்றுப்படுத்திய விரிவுரையாளர் களுக்கும், விளம்பரம் தந்து ஊக்கப்படுத்தியோருக்கும், அழகாக அச்சிட்டு வழங்கிய சித்திரா அச்சகத்தினருக்கும் எமது நன்றி களைக் கூறி, வைகறையை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி கொள் கிறோம்.

ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர் முன் பயிற்சியும் அநுபவமும்

*88-08-16* காலை 'முரசொலி'யைப் பார்க்கிறேன். நாளை முதல் புதிய ஆசிரியருக்கான சேவை முன்பயிற்சி தொடங்க இருப்பதாகச் செய்தி தெரிவித்தது.

நாளை எப்பொழுது விடியுமென்று நித்திரை இன்றித்தவிக்கிறேன். மகளுக்கு ஆசிரியப்பணிகிடைத்து நாளை தம்மைவிட்டுப் பிரிந்து பயிற்சிக்காகச் செல்லப்போகிருளே என்ற எண்ணத்தால் எனதுபெற்றோரும் துயில்கொள்ளவில்லை. 17ஆந் திகதி காலை தேவையான பொருள்களுடன் பேருந்து நிலயத்தை நோக்கி நடக்கிறேன்

யாழ்ப்பாணம் மத்தியகல்லூரியை அடைகிறேன். அக்கல்லூரி தான் எனது பயிற்சிநிலையம். இன்றுவரை இக்கல்லூரியைப் பார்த்தறியாத நான் அதன் பிரமாண்டமான கட்டிடங்களையும் வானுயர்ந்து நோக்கி வளர்ந்திருக்கும் மரங்களையும் செடி கொடிகளையும் பரந்துகிடக்கும் கல்லூரிமைதானத்தையும் பார்த்து வியந்துநிற்கிறேன். அதேவேளை வெறிபிடித்த இனத்துவேஷிகளின் ஆதிக்கத்தால் ஏற்பட்ட கட்டிடச் சிதைவுகளையும் கல்லூரி மைதானம் கல்லூரிக்கே பயனற்ற நிலைமையையும் கண்டு வேதனை கொண்டு ஏங்கி நிற்கிறேன். வந்த நேரத்திலிருந்து நின்ற இடத்தை விட்டு அசையாமல் நின்ற என்னைப் பார்த்து 'தங்கச்சி' இங்கை கதிரைகள் போட்டிருக்கிறம், அதிலை போய் உட்காருங்கள், என்கிருர் கல்லூரிச் சிற்றூழியர்.

என்னைப்போலவே பயிற்சி பெறப்பலர் வந்தனர். வந்த முகங்களிலே ஒன்ருவது தெரிந்த முகமாக இருக்கக் கூடாதா என்று ஏங்குகிறேன் அனைத்துமே புதுமுகங்கள் தாம் என்னடா இது, கண்ணைக் கட்டிக் காட்டிலே விட்டது போலிருக்கிறதே என்று அங்கலாய்த்துக் கொள்கிறேன்.

நேரம் பி. ப. 3மணி. அதிபர், 'பிள்ளைகள் நீங்கள் அனைவரும் ஒழுங்காக வந்து பெயர்களைப் பதிவு செய்துவிட்டு விடுதிக்குச் செல்லுங்கள்' என்ருர். வரிசை நீழ்கிறது. பதிவுகள் முடிகின்றண. எனக்கு 55ஆம் இலக்கக் கட்டில், எல்லாவற்றையும் ஒருவாறு ஒழுங்கு படுத்திவிட்டு எனது கட்டிலில் அமர்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர்கள் முற்றிலும் எனக்குப் புதிதானவர்களென்பதால், யாருடனும் பேசாது நடப்பவற்றை அவதானிக்கிறேன். சிறிது நேரத்தில் தேநீரும் முடிகிறது.

துயிலுக்காகச் செல்லுகிறோம். புதிய இடம்; புதிய சூழல்; முற்றிலும் புதியவர்கள்; கல்லூரியைச் சூழக் காவல் அரண் அமைத்திருக்கும் அயல்நாட்டுப்படைகள்; இடையிடையே துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள். இவையெல்லாம் ஒன்றிணைந்து என்னுட் பயத்தையே உண்டாக்கின. எனக்கருகிலே துயில் கொண்ட '54' எழும்பி. 'என்ன உமக்கு நித்திரை வரேல்லையா?' என்று கேட்டுவிட்டு மீண்டும் படுத்துக் கொள்கிறது.

அடுத்த நாள் காலை உணவு முடிகிறது. கூட்டம் நடைபெறும் மண்டபத்திற்கு விரைகிறோம் மேடையிலே விரிவுரையாளர்கள். மௌன வணக்கத்தைத் தொடர்ந்து கல்வி அதிகாரி சிவானந்தன் உட்பட விரிவுரையாளர்களின் மங்கள விளக்கேற்றலுடன் கூட்டம் தொடங்குகிறது. ஆசிரியர் சேவைக்கு முந்திய பயிற்சியின் முக்கியத்துவம், வருங்காலச் சந்ததியினரின் வளமான வாழ்வுக்கு நாம் வழிகாட்ட வேண்டிய அவசியம், அவர்கள் ஒழுக்கம். கடமை. கண்ணியம், கட்டுப்பாடு கொண்டவர்களாக வளர்ந்து நாட்டுக்குகந்த நல்லவர்களாக வாழ்வதற்கு நாம் ஆற்ற வேண்டிய பணி பற்றியெல்லாம் விரிவுரையாளர்கள் எமக்கு விளக்கினார்கள்.

அடுத்த நாள் உடற்கல்வியுடன் பயிற்சி தொடங்கிற்று முதல் நாட் பயிற்சிக்கு ஈடுகொடுக்க எல்லாராலும் முடியவில்லை ஆனாலும் நாளடைவில் எம்மைப் பழக்கப்படுத்திக் கொண்டோம். எமக்கான கால அட்டவணை நேர்த்தியாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. 10 அல்லது 15 நிமிட இடைவெளியைத் தவிர மிகுதி நேரமெல்லாம் நாம் பம்பரமாய்ச் சுழன்று பணியாற்ற வேண்டிய கட்டாயம். நாள்கள் நகர்கின்றன. நாமனைவரும் நண்பர்களாகின்றோம். யாழ்மாவட்டத்தின் நாலாபுறத்திலிருந்தும் வந்தவர்கள் யாழ் மத்தியகல்லூரியில் நன்றாக இணைந்து விட்டோம். ஒவ்வொருவரிடத்திலும் ஒவ்வொரு பழக்கவழக்கம்; முரண்பாடுகளின் மத்தியிலும் ஓர் உடன்பாடு.

காலையில் தொழில் சார்கல்வி, பொதுக்கல்வி மாலையிலே அழகியற் கல்வி, இலக்கியநயம் என்பனவற்றிற் பயிற்சிகள். இவையனைத்தும் குறிப்பிட்ட நேரங்களிலே ஒழுங்காக நடைபெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்த நேரத்தில் குறித்த பணியை ஆற்றவும் மற்றவர்களுடன் பழகும் போது விட்டுக்கொடுத்து நடக்கவும் நாம்பழகிக் கொண்டோம். எம்மிடையே அன்பும் சகோதரத்துவமும் வளரத் தொடங்கின. வீட்டிலே பெற்றோருக்கு அன்புச் செல்வமாக இருந்த எனக்குப் பலரின் மத்தியிலே பழகுவது புதியதோர் அநுபவமாகவே இருந்தது.

பயிற்சியின் பொழுது மாதிரி வகுப்புக்களும் நடைபெற்றன. ஆரம்ப வகுப்பு மாணவர்க்கான மாதிரிக்கற்பித்தல் வகுப்புக்கள் மிகவும் சிறப்பாக நடைபெற்றன. கவிதையரங்கு, கண்காட்சி, கலைவிழா, விளையாட்டுப்போட்டி என்பன சிறப்புற நடத்தப்பட்டன. இந் நிகழ்ச்சிகள் அனைத்திலுமே நாம் பங்கேற்று எமது திறமைகளை வெளிக்காட்ட வாய்ப்புக்கள் கிடைத்தன.

கல்விப்பணிப்பாளர் திரு. வெ. சபாநாயகம் அவர்கள் எமது நிலையத்துக்கு வருகை புரிந்து சிறப்புரையாற்றியமையும் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

இறுதிநாள் நிகழ்ச்சிகள் முடிவுறுகின்றன. வீடுகளுக்குப் புறப்படத்தயாராகிறோம் தாயைப் பிரியும் கன்றைப்போலக் கல்லூரியை விட்டுப்போக மனமின்றித் தவிக்கிறேன் நண்பர்களாக நாம் இணைந்து கொண்டவர்கள்; நாளை நாமெல்லாம் பிரிந்து செல்லப்போகிறோம். அன்பாக உபசரித்த பெரியவர்கள் நாளை நம்மை மறந்துவிடப் போகிறார்கள். ஏன், இந்தக் கல்லூரி விடுதியைக்கூட நாமும் மறந்து விடலாம்.

'உறவு என்றொரு சொல் இருந்தால் பிரிவு என்றொரு பொருளிருக்கும்' என்று பொருளுணர்ந்து மௌனமாக பேருந்து நிலயத்தை நோக்கி நடக்கின்றேன்.

இ. தேன்மொழியாள்

---

தாய்! உலகத்தில் காணப்படும் ஒரேயொரு புனிதமான படைப்பு.

தாயின் அன்பை வெளிவிட உலகத்தில் உள்ள எந்த மொழியிலும் போதிய வார்த்தைகள் இல்லை.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குழந்தையும் மொழியும்

மனிதனுடைய உணர்ச்சிகளையும் கருத்துக்களையும் வெளிப் படுத்தும் தலைசிறந்த சாதனம் அவன் கையாளும் மொழியா கும். ஆதியில் மனிதன் தனது தேவைகளை நிறைவு செய்ய சைகைகளையும் சித்திரங்களையும் பயன்படுத்தினான். சைகைகளுக்கு ஓசையைத் துணைக்கருவிகளாக்கிய பொழுது சொற்கள் தோன் றின. சொற்கள் ஓர் ஒழுங்குபட்ட முறையில் கையாளப்பட்ட பொழுது அது மொழியாயிற்று.

மொழி என்ற சொல் மொழிதல் என்ற வினையடியாகத் தோன்றியதாகும். அதாவது கருத்துப்பரிமாற்றத்தை பேச்சு வாயிலாக மொழிதலே மொழியின் தொடக்க நிலையாகும். இவ்வாறு பேச்சு நிலையில் தொடங்கிய மொழி காலப்போக்கில் குறியீடுகளைப் பெற்று இன்று பேச்சாகவும், எழுத்தாகவும் வளர்ச்சி பெற்றுள்ளதை நாம் காணலாம்.

உலகிலுள்ள எல்லா மொழிகளும் பேச்சுவழக்கு, எழுத்து வழக்கு ஆகிய இருவகை வழக்குக்களையும் கொண்டவை அல்ல. இன்னும் வளர்ச்சியடையாத ஆதிவாசிகளாகிய மக்களிடையே மொழியானது பேச்சுவழக்கில் மட்டுமே நிலவுதல் காணலாம். அறிவுத்துறைகளிலும் நாகரிகத்திலும் வளர்ச்சி பெற்ற இனத்தின ரிடையே மட்டுமே இவ்விரு வழக்குக்களும் அமைந்துள்ளமை குறிப் பிடத்தக்கது ஆனால் ஒரு காலத்தில் பேச்சுவழக்கு எழுத்துவழக்கு ஆகிய இரண்டையும் கொண்டிருந்த மொழிகள் சில இன்று எழுத்து வழக்கில் மட்டுமே வாழ்வதனையும் நாம் மறந்து விடல் ஆகாது சமஸ்கிருதம், இலத்தின் முதலிய மொழிகளை எழுத்து வழக்கில் மாத்திரம் நிலவும் மொழிகளுக்கு உதாரணங்களாகக் கொள்ளலாம்.

இவற்றை எல்லாம் நோக்குமிடத்து மொழியானது எவ்வள வுக்கு எவ்வளவு அறிவியல் துறையிலும் பண்பாட்டு நிலையிலும் வளர்ச்சி பெற்றுள்ளதோ அந்த அளவிற்கு அது சிக்கல் நிறைந்த தாகவும் இருக்கிறது. இந்நிலையில் குழந்தையை அதனுடைய மொழிக்கு அறிமுகம் செய்து வைத்தலே பாடசாலை புகாப்பருவத் தில் ஆசிரியர்களுடைய இன்றியமையாத கடமையாகும்.

பாடசாலை புகாப்பருவம் என்பது 4வயது தொடக்கம் 5வயது ஆரம்பம் வரை உள்ள காலமாகும். இப்பருவத்தில் உள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தை தனது உணவுகளேயும் தேவைகளேயும் நிறைவு செய்யக்கூடிய அளவிற்கு மொழியைக் கையாளும் திறன் பெற்றிருக்கும். உடல்வளர்ச்சிக் குறைவிலோ, மூளே வளர்ச்சிக் குறைவிஞலோ, கொன்னே (திக்கு காரணமாகவோ பேச்சுத்திறன் குறைவான பிள்ளேகளே விதிவிலக்காகக் கொண்டால் மிகுதியாயுள்ள பெரும்பாலான பிள்ளேகள் தமது உள்ளக் கருத்துக்களேச் சரளமாக வெளிப்படுத்தும் திறன் உடையவர்களாகவே இருப்பர்.

அச்சம் காரணமாகவோ, வளர்ப்புமுறை காரணமாகவோ, சூழல் காரணமாகவோ இவர்களுட் சிலர் பேசும் திறன் குறைந்தவர் போலத்தோன்றக்கூடும் அவர்களுடைய குடும்பத்தில் கையாளப்படும் சொற்களின் தரமும், சிலவேளேகளில் அவர்களுடைய வெளிப்பாட்டுத் திறனுக்கு ஊறுபயப்பனவாகஇருத்தலும் கூடும் ஆகவே ஆசிரியர் ஒருவரின் கடன் இத்தகைய தடைகளின்றும் படிப்படியாகமாணவர்களே விடுவித்து அவர்கள் தமது கருத்துக்களேயும், உணர்வுகளேயும் தயக்கமோ, பயமோ இன்றி வளிப்படுத்துதற்கான சூழ்நிலேயை உருவாக்கிக் கொடுத்தல் வேண்டும். எடுத்த எடுப்பிலேயே வாசித்தல், எழுத்துக்களேத் தெரிந்து கொண்டு எழுதப்பயிலுதல் ஆகிய முயற்சிகளில் பிள்ளேகளே ஈடுபடுத்துதல் தவருகும் இம்முறையிஞல் மொழி வெளிப்பாட்டுத் திறன் தொடக்கத்திலேயே பாதிப்படைய நேரிடும்.

*த. உதயராணி*

❈

## நாட்டார்பாடல்கள்

வாழ்க்கை நிகழ்ச்சிகளேயும் அவற்றிஞல் ஏற்பட்ட அநுபவங்களேயும் உணர்சிகளேயும் கல்வியறிவில்லாத பாமர மக்கள் தமக்கு இயற்கையாக அமைந்த திறமையாலும் பயிற்சியாலும் பாடுகின்ற மரபு வழிப்பட்ட பழமை வாய்ந்த இசைமரபுப் பாடல்களே நாட்டார்பாடல்களெனப்படும் இவை குறிப்பிட்ட ஓர் இன மக்களின் அல்லது பிரதேசத்தினரின் பண்பாட்டுக் கோலங்களேப் பிரதிபலிப்பனவாக இலகுகின்றன. பொட்சின் என்பவர் ''நாட்டார் பாடல்களே இசைப்பாடல்கள், கதைப்பாடல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகப்பாடல்கள்'' என மூன்ருக வகுத்துள்ளார். ஆனல் அதற்குப் பிற்பட்ட ஆய்வாளர்கள் பாடுவோரின் இயல்புகளைக் கொண்டு பின்வருமாறு வகுத்துள்ளனர்.

1. ஆண்கள் பாடுபவை 2. பெண்கள் பாடுபவை

3. இருபாலரும் சேர்ந்து பாடுபவை

ஆய்வாளர்களின் பகுப்பான பாடுவோரின் பாடலையொட்டிப் பாடல்களைப் பகுப்பது ஆய்வுக்குப் பொருந்துவதாகக் காணப் படவில்லை. காரணம் வயற்களத்திலே அருவி வெட்டும் போது ஆணும் பெண்ணும் சேர்ந்து பாடும் பாவனையில் ஆண்கள் பெண்கள் கூற்ருகப் பாடுவதுமுண்டு. எனவே இப்பாடல்களை பால் அடிப்படையிற் பகுப்பது பொருந்துவதாகக் காணப்படவில்லை. சில ஆய்வாளர்கள் பின்வரும் வகைகளாகப் பகுத்துள்ளனர்.

1 தாலாட்டுப் பாடல்கள்
2. சிறுவர் விளையாட்டுப் பாடல்கள்
3. தொழிற் பாடல்கள்
4. காதற் பாடல்கள்
5. வழிபாட்டுப் பாடல்கள்
6. கதை கூத்துப் பாடல்கள்
7. ஒப்பாரிப் பாடல்கள்

குழந்தை பிறந்து, வளர்ந்து, ஓடிவிளையாடும் பருவம் வரையும் தாய்மார் குழந்தையின் பொருட்டுப் பாடுகின்ற பாடல்கள் அனைத்தும் தாலாட்டுப் பாடல்களெனப் படுகின்றன.

''ஆராரோ ஆரீவரோ
ஆராரோ ஆரிவரோ
ஆரடித்து நீயழுதாய்
கண்மணியே கண்ணுறங்காய்''

பாட்டி தன் பேரனைத் துயிலூட்டும் போது

''தம்பிதானே அழுகிருராம்
தாயார் மடிதேடி
அல்லி மகாராசாவுக்கு
கிட்டவந்து பால் கொடம்மா'' என்பன போன்றவை

தாலாட்டுப்பாடல் வகையைச்சேர்ந்தவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுர்கள் ஓடியும், ஆடியும் கூடியிருந்தும் பாடும் வகையில் பயன்படுகின்ற. பாடல்கள் சிறுவர் விளையாட்டுப் பாடல்கள் ஆகும் இது கூடுதலாக மட்டக்களப்புக் கிராமப்புறங்களில் பாடப்படுகின்றன. இவைகளுக்கு உதாரணமாக கிட்டிப்புள் விளையாட்டின் போது பாடப்படும் கிட்டிப்பாடல்களையும், ஊஞ்சல் விளையாட்டின் போது பாடப்படும் ஊஞ்சற்பாடல்களையும் குறிப்பிடலாம். இவை நகைச்சுவை மிக்கனவாகவும், குழந்தைகளின் அறிவுவளர்ச்சிக்குப் பயன்படுவனவாகவும் அமைகின்றன. மக்களின் அன்ருடவாழ்க்கைப் பின்னணியிலே தொழிற்களங்களிற் பயன்பாடுடையனவான தொழிற்பாடல்கள் களைப்பை மறந்து உற்சாகத்தோடு வேலைகளைச் செய்து முடிக்கக்கூடிய ஆற்றலைப்பாட்டாளி மக்களுக்குக் கொடுத்து வருவதனுல் கால்நடைகளால் வயலுழும்போதும். சூடுமிதிக்கும்போதும், வயலுழக்கும், போதும் அரிவிவெட்டும்போதும், காவற்பறண் காக்கும் பொழுதும் நெல்குற்றும்போதும், மீன் பிடிக்கும்பொழுதும் இப்பாடல்கள் பாடப்படுகின்றன.

காதல் வழிநின்ற கிராமிய ஆடவர் அரிவையரது உள்ளார்ந்த காதலுணர்ச்சி சொல்லோவியமாக வெளிப்படும்போது தோற்றம் பெறுவது காதற் பாடல்களாகும். நாட்டார் காதற் பாடல்களுக்கும் சங்க அகத்திணைப்பாடல்களுக்கும் பொருள் மரபில் பெரிதும் ஒற்றுமை காணப்படுகின்றன இதுபற்றி தமிழண்ணல் கூறும் கருத்தை மேற்கோளாகத் தருதல் பொருத்தமானது.

> ''தமிழ் இலக்கியத்தின் பலமரபுகளை ஆராய்ந்தறிவதற்கு மட்டுமன்றி, அவ்விலக்கியப் பகுதிகளைப் புரிந்து கொள்வதற்கும் சுவைப்பதற்கும் கூட நாட்டுப்பாடற் பயிற்சி பெருந்துணை புரியும் என்பதை நம்மிற் பலர் தெளிவாக உணரவேண்டும்''

காதலர் நலம்புனைந்துரைக்கும் பாடல்கள்;காதலர் பிரச்சினைகள் பற்றியது காதலர் உறவுமுறை கூறும் பாடல்கள், காதலர் தனிமையிற் சந்திக்க வழி கூறுவதாகவும், காதலர் சூள் உரைப்பதாகவும், காதலர் பற்றிய அவர் வாய் மொழிப் பாடல்களாகவும் ஒழுக்கத்தைப் பேணும் காதற் பாடல்களாகவும், மொழிப்பாடல்களாகவும், இணைவிழைச்சுப் பாடல்களாகவும், காதலரது பிரிவுத் துயர்ப்பாடல்களாகவும், தூதுச்செய்திப்பாடல்களாகவும், வெறுப்பைக் குறிக்கும் பாடல்களாகவும் அமைவதைக் காணலாம்.
கிராமிய வாழ்க்கை முறையிற் சமயச்சடங்குகளும் சமய நம்பிக்கைகளும் மிகவும் தொடர்புடையன. மட்டக்களப்பு மாவட்டத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைப் பொறுத்த வரையில் கண்ணகி வழிபாடு; தேவதை வழி பாடு, மந்திரத்துடன் தொடர்புடைய பேய் நம்பிக்கைப் பாடல் கள் யாவும் இவற்றுள் அடங்குகின்றன.

கிராமியமக்களது பொழுதுபோக்கு கேளிக்கை, கூத்து என் பவற்றுடன் தொடர்புடையவை கதைக்-கூத்துப்பாடல்களாகும். இவை இதிகாசப்புராணக்கதைகளையும், நாட்டுமாந்தர் பற்றிய வீரதீரக்கதைகள், அம்மானை, பள்ளு என்பனவும் அடக்கப்படு கின்றன.

மரண வீட்டிற் பாடப்படுவது ஒப்பாரியாகும். இது இறந் தோருக்கும் ஒப்பாரிபாடுவோருக்கும் ஏனையோருக்குமுள்ள பாசத்தின் தொனியாகவும், சமுதாயப்பிரச்சினைகள் சம்பிரதா யங்கள் என்பவற்றைப் பிரதிபலிப்பனவாகவும் அமையும்.

குறிப்பிட்ட ஓர்இன மக்களின் அல்லது பிரதேசத்தின் பண் பாட்டினை கடினமான இசை நுணுக்கங்களற்ற எளிதான ஓசை அமைப்பினையுடையதாகவும் பரம்பரை பரம்பரையாக வாய் மொழி மரபில் வழங்கி வருவதுமான இப்பாடல்களில் அசை, சீர், தளை, அடி, தொடை முதலிய பாடல் உறுப்புக்கள் அந்தாதித் தொடையாகத் திரும்பத் திரும்ப வரும் பண்பினை உடையதாகக் காணப்படுகின்றன. பரம்பரை பரம்பரையாக வாய்மொழி மர பிற் பாடல்கள் வழங்கி வரும்போது அவற்றில் மாற்று வடிவங் கள் தோன்றுதல், இப்பாடல்களை ஆக்கியோரின் பெயர்கள் தெரி யாதிருத்தல் எளிமையும் மொழிச்சிக்கல் இன்மையும், உணர்ச் சிப் புலப்பாடும். இதன் முக்கிய சிறப்பியல்புகளாகக் காணப்படு கின்றன.

தா சொபியா வதனி

---

*சிந்தனைக்குச் சில மணிகள்*

1. சுவர்க்கம் என்பது தாயின் மடியில் உள்ளது.
2. ஒரு பெண்ணிற்கு அணிகலன் எது தெரியுமா? தாய்மை தான் அது.
3. பிரான்ஸ் தன் நிலையிலிருந்து உயர நல்ல தாய்மார் சில வேண்டும்-நெப்போலியன்

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலைக் கல்வியில் மதிப்பீடு

ஆரம்ப ஆசிரியருக்கான பயிற்சி நெறியினைப் பெற்றுவிட்ட நாம் சில புதிய உத்திகளைக் கையாளவேண்டியுள்ளது எமது சக ஆசிரியருக்காகவும், பெற்றோருக்காகவும், மாணவருக்காகவும் ஒப்படை, மதிப்பீடு என்பவற்றைக் கூறலாம் என எண்ணியுள்ளேன்,

ஒப்படை என்பது ஒரு பிரதானமான மதிப்பீட்டு உத்தியாயாகும். மாணவரின் படைப்பாற்றலைப் பயன்படுத்திப் பல அரிய சாதனைகளை எதிர்காலத்தில் புரிவதற்கு ஆரம்பப் பயிற்சிக்களமாகவும் இதனைப் பயன்படுத்தமுடியும். ஒப்படை என்னும் மதிப்பீட்டு உத்தியின் பிரதான நோக்கம், அதன் ஒழுங்கமைப்பு என்பன பற்றித் தெளிவான விளக்கத்தினைக் கொண்ட ஆசிரியர்கள் இருப்பார்களாயின் மாணவரின் திறமை தவறாகக் கணிக்கப்படமாட்டாது இவ்விடயம் தொடர்பாகப் போதுமானவளவு முன்னறிவினையும் அநுபவத்தினையும் இப்பயிற்சி வகுப்பில் பெறக்கூடியதாக இருந்தது.

இம்மதிப்பீட்டுத் திட்டத்தினைச் செயற்படுத்துகையில் வாய்மொழிப் பரீட்சை, வாசிப்புப் பரீட்சை, எழுத்துப் பரீட்சை, செயல்முறைப்பரீட்சை, ஒப்படைகள் ஆகிய பரீட்சைகள் நடைபெறுகின்றன. இம்மதிப்பீட்டின் முக்கியத்துவங்களாவன: ஒவ்வொரு பாடத்திலும் பல தடவைகள் மதிப்பீடு இடம் பெறுவதால் மாணவனின் முன்னேற்றம் தொடர்ச்சியாக அவதானிக்கப்படுவதற்கும், நெறிப்படுத்துவதற்கும் வாய்ப்பு ஏற்படுகின்றது. மாணவனின் அறிவுவிருத்தி, மனப்பாங்குவிருத்தி, திறன் விருத்தி ஆகிய மூன்று வகை விருத்திகளையும் மதிப்பிடுவதற்கான வழிமுறைகள் இங்குண்டு. மதிப்பீடு செய்யப்படாத எவரும் வகுப்பில் இருக்கமாட்டார். மாணவரிடையே காணப்படும் தனியாள் வேறுபாடுகளை இனங்காணவும், அதற்கு ஈடுகொடுக்கும் வகையில் கற்பித்தற் செயல்முறையை ஒழுங்குபடுத்தி கல்வித் தரத்தின் மேம்பாட்டிற்கு வழிகோலவும் வாய்ப்புண்டு. குழு உணர்ச்சி, குழுமுயற்சி என்பவற்றிற்கு இடமளிப்பதுடன் ஒவ்வொரு மாணவனினதும் தனித்துவத்தைப் பேணுவதற்கும், மாணவனின் படைப்பாற்றலைப் புலப்படுத்துவதற்கும் சிறந்த ஊடகமாக ஒப்படையமைந்துள்ளது. ஒவ்வொரு மட்டத்திலும் மாணவனின் தேர்ச்சி நிலையினையறியவும் வாய்ப்பு ஆசிரியருக்கு மட்டுமன்றி ஒவ்வொரு பெற்றோருக்கும் மாணவருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டு. பாடம் தொடர்பாக மாணவர், பெற்றோர் ஆகியோ ரின் ஈடுபாடும் அதிகரிக்க இடம் ஏற்படுகின்றது ஒப்படையின் போது செலவு செய்யப்படும் நேரம் முயற்சி ஒரு முதலீடாகக் கருதப்படும். ஒப்படை என்னும் உத்திமூலம் பிள்ளையின் கல்வி யின் பங்கு ஒரு சிறந்த அம்சமாகும். ஆற்றலும் அநுபவமும் உள்ள ஆசிரியர்கள் இருக்குமிடத்து இத்திட்டத்தின் மூலம் பெற்றோருக்குப் பொருளாதாரப் பிரச்சினைகள் ஏற்படுவதில்லை. நற்பயன்கள் பல கொண்ட இத்திட்டம் ஆற்றலையும், அறிவை யும் மாணவரிடத்தும் ஆசிரியரிடத்தும் ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

*கண்மணி இராமநாதன்*

## பாடசாலையில் இசைக்கல்வி

இன்றைய சிறுர்கள் நாளைய சமுதாயத்தின் அத்திவாரங்கள். அந்த அத்திவாரத்தில் கட்டப்படும் கட்டிடங்கள் நிலையாக நிற்க வேண்டுமானால் அந்தப் பொறுப்பு ஆசிரியரிடமும் பெற் றோரிடமும் தான் உள்ளது.

ஆரம்ப கல்வியைப் பயிலும் சிறுர்களைக் கவர வைக்கும் அம் சங்கள் இசை, அவிநயம், விளையாட்டு, ஒரு பாடலை அவிநயத் துடன் செய்து காட்டுவதனால் அது அவர்கள் நெஞ்சில் பசுமரத் தாணி போல் பதிந்துவிடுகின்றன.

இசை ஒரு தெய்வீகக்கலை இசை தெய்வீகத்தன்மை அளிக் கப்படும் தன்மையை இசையுடன் தொடர்புடைய இசைக்கரு விகளை தாங்கி இருக்கும் தெய்வங்களிலிருந்து அதன் முக்கியத் துவம் உணரப்படுகின்றது. சிவபெருமான் கையில் உடுக்கும் சரஸ்வதியின் கையில் வீணையும் கண்ணன் கையில் புல்லாங்குழ லும் இருப்பது இசையின் இறைத் தன்மையை உணர்த்துகிறது.

குழந்தைகளுக்கு பாடல்களை பாடிக்காட்டும் போது அதை சொல்லிக் கொடுத்தும் பின் அதை அவிநயத்துடன் செய்து காட்டி அவர்களை ஆரம்ப நிலைக்கு கொண்டு வருதல் இசைக் கும் இரைச்சலுக்கும் உள்ள வேறுபாட்டை உணரவைத்தல். பலவிதமான சத்தங்களை உண்டு பண்ணியும் அந்தச் சத்தத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து எவ்வாறு சங்கீதம் வேறுபடுகின்றது என்பதையும் இசைக்கு ஆதாரமானது நாதம். அந்த நாதமானது ஒலியை ஒழுங்காக எழுப்பும்போது உண்டாகின்றது. நாதத்தில் இருந்து சுருதியும் சுருதியிலிருந்து சுரங்களும் சுரங்களிலிருந்து இராகங் களும் இராகத்திலிருந்து கானமும் உண்டாக்கப்படுகின்றது என் பதையும் குழந்தைகளுக்கு படிப்படியாக உணர வைத்தல் வேண்டும்.

பாட்டை சீராக கொண்டு செல்வதுதான் தாளம். தாளத் தின் முக்கியத்துவததை உணர வைத்து இசையை தாளத்துடன் சொல்லிக் கொடுத்தல் நன்று. இவ்வாறு குழந்தைகளை இசை யுடன் தொடர்புபடுத்த வேண்டும். ஸப்த ஸ்வரங்களின் ஸ்ருதி யில் ஒன்றன்பின் ஒன்றாகப் படிப்படியே ஏறி இறங்கி வருவது ஆரோகணம் அவரோகணம் எனப்படும். இதுதான் இசைக்கு அடித்தளம். இசையை இசைக்கருவிகள் இன்றி கேட்பது மண மின்றிய மலர் மாதிரித்தான் இருக்கும். மணமுள்ள மலரை மாலையாக மாற்றும்போது எவ்வாறு அழகாக மணமுள்ளதாக மாறுகிறதோ அதே மாதிரித்தான் இசைக்கு இசைக்கருவிகள் இன்றியமையாதனவாகும்.

சிறுகுழந்தை பாடும் போது கேட்பதற்கு எவ்வளவு இனிமையாக இருக்கும். இன்பம் கரைபுரண்டோடும்.

> குழலினது யாழினிது என்பதம் மக்கள்
> மழலைச் சொல் கேளாதவர்.

எல்லா இன்பத்தையும் விட கேட்டலே மேலானது என்றார் வள்ளுவர். குழந்தைப் பாடல்களை நாம் காதினால் கேட்கும் போதுகூட எமக்கு எவ்வளவு அன்பு பாசம் ஆனந்தமும் ஏற்படு கின்றது. அதை அவர்கள் வாய்மொழியாக கேட்கச்சொல்லவும் வேண்டுமா? சில பாடல்களிலிருந்து நோக்கும் போது:- ''முத்து முத்தான சித்திரங்கள்''. பத்தரை மாற்றுத் தங்கத்தை போன்று'' ''காலைத் தூக்கி கண்ணில் ஒற்றிக் கட்டிக் கொஞ்சும் அம்மா'' இப்பாடல்கள் எல்லாம் நாம் கேட்கும்போது குழந்தைகளின் முக்கியத்துவம் உணர்த்தப்படுகின்றது.

இசைப்பாடல்களை அவிநயத்துடன் செய்வதனால் அவர்க ளுக்கு இன்பத்துடன் அறிவூட்டப்படுகின்றது. நாட்டியத்தின் நோக் கம் இன்பம் அறிவூட்டலாகும். கர்நாடக இசையில் 72 தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகங்கள் உள்ளன. இவற்றிலிருந்து எண்ணற்ற ஜன்னியராகங்கள் உள்ளன. ஜன்னியராகம் தாய்ராகத்தில் வரும் சுரஸ்தானங்கள் உடன் அன்னிய சுரத்தை எடுத்துக்கொண்டால் அவை பாஷாங்க ராகமாக மாறுகின்றன. ஜன்னிய ராகத்தின் பிரிவுகளாவன ஔடவம், ஷாடவம், ஸ்வாரந்தராகங்கள் முக்கியம் பெறுகின்றன

வடஇந்திய சங்கீதத்தில் தாய்ராகங்கள் பத்து உள்ளன. இசையைப்பாடும் கலைஞனுக்கு மட்டும் பக்குவம் இருக்க வேண்டும் என்பதில்லை. அதை ரசிக்கும் ரசிகனுக்கும் இசையைரசித்து அதில் ஒன்றிணைய பக்குவம் வேண்டும். ஓர் இசைக் கலைஞன் பாடும் போது அதை ரசிக்க எல்லோராலும் முடியாது. பக்குவம் உள்ள ரசிகனுல் தான் அதை உணரவும் அதனுடன் இணைந்து செயற்படவும் முடியுப்.

மனிதனையும் மிருகத்தையும் வேறுபடுத்தி உணரவைக்கும் திறன் இசைக்கு உண்டு. மனிதனுல் தான் இசையை ரசிக்க முடியும். நவரச உணர்ச்சிகளையும் அப்பட்டமாகப் பிரதிபலிக்கக் கூடியது அழகியற்கலை. இவற்றுள் இசையே முதலாவதுஇடம் பெறுகிறது. இசையின் மூலம் பொறுமை, சாந்தம், கருணை பக்தி, இரக்கம், கட்டுப்பாடு, கற்பனுசக்தி, ஞாபகசக்தி ஆன்மீகவளர்ச்சி, தலைமைத்துவம் போன்ற நற்பண்புகளை பெற்றுத் தரும் வல்லமை இசைக்கு உண்டு.

இசை உருப்படிகளை எல்லோரும் இயற்ற முடியாது. அதற்கு கற்பனுசக்தி, ஆன்மீகசக்தி, மனேஞானம், உள்ளவர்கள் தான் இயற்ற முடியும். நாம் பாடும் உருப்படிகள் எல்லாம் அப்படிப்பட்ட இசைக் கலைஞர்களால் ஆக்கப்பட்டவைதாம்

இசையை நாம் கற்பிக்கும் போது அதன் முக்கியத்துவம் தூய்மை என்பவற்றை மனதில் கொண்டு கற்பிக்கவேண்டும் இந்த எண்ணம் வளரும் சிறுரிடமும் வளர்ந்துவர வேண்டும் என்பதை உணர்ந்து அந்த தெய்வீகக் கலையாகிய இசையை நாம் கற்பித்தல் வேண்டும்.

*தி. செம்மணச்செல்வி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர் மையக்கல்வி

ஒருவன் தனது சிறுவயது முதல் தனக்கு ஏற்படுகின்ற பல் வேறு தேவைகள், பிரச்சினைகள் போன்றவற்றை அறிந்து அவற்றைத் தீர்த்துக்கொள்வதற்கும், நாட்டிற்கு ஏற்ற நற்பிரஜையாக வாழ்வதற்கும் கல்வி இன்றியமையாததாகின்றது. கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்று சொல்வார்கள். அதாவது கல்வி கற்றவர்கள் எல்லோராலும் வரவேற்கப்படுகிறார்கள்; கௌரவிக்கப்படுகிறார்கள். கல்விகற்ற ஒருவன் அறியாத, தெரியாத ஓர் இடத்துக்குச் சென்றோ அல்லது அறியாத தெரியாதவர்களுடனோ, தனது கல்வியறிவைப் பயன்படுத்த பழகிய எந்த ஒரு விடயத்திலும் வெற்றியீட்டக்கூடிய திறன் ஏற்படுகின்றது.

எமக்கு ஆரம்பக்காலத்தில் முன்வைக்கப்பட்ட கல்விக் கொள்கையானது ஆசிரியருக்கும், பாடத்திற்கும் முக் யத்துவம் கொடுத்ததேதவிர, பிள்ளைகளின் இயல்புக்கேற்றதாகவோ, விருப்பு வெறுப்புகளுக்கேற்றதாகவோ அமைக்கப்படவில்லை. இவ்வாறமைந்த கல்விக்கொள்கையினால் மாணவர்களின் ஆற்றல்களை, திறன்கள், மொழித்திறன்வளர்ச்சி என்பனவும், நாட்டின் பொருளாதாரவளர்ச்சி என்பனவும் வளர்ச்சியடைய முடியாத நிலை காணப்பட்டது.

ஆனால் இன்றைய கல்வியாளர்களின் கல்விக்கொள்கைகள் மிகவும் சிறந்தனவாகக் காணப்படுகின்றன. அதாவது மாணவரை மையமாகக் கொணடு கல்விக்கொள்கைகள் வகுக்கப்பட்டுள்ளன. இதனால் மாணவர்களின் இயல்புக்கேற்றதாகவும், அவர்களின் உடல், உளக்குறைகளை அறிந்து, பாதிக்கும் காரணிகளைத் தவிர்த்து அவர்களின் ஆற்றல்கள். திறன்கள் என்பவற்றை வெளிக்கொண்டுவரக்கூடியதாகவும்இருக்கின்றது இக்கற்பித்தலில் கற்பித்தல் சாதனங்களாக உபகரணங்கள், காட்சிப்படங்கள், துணைக்கருவிகள் போன்றவற்றிற்கு மூக்கிய இடமளிக்கப்படுகின்றன. இதனைவிட இன்றைய கல்விக்கொள்கையானது மக்களின் சமுதாயத்திற்கும், கொள்கைகளுக்கும் ஏற்றவகையிலும், இயற்கை மூலவளங்களை பிரயோகிக்கக்கூடியவகையிலும், தொழில்வாய்ப்பைப் பெறக்கூடியவகையிலும் அமைக்கப்பட்டுள்ளது. எனவே நாம் இக்கல்விக் கொள்கைகளைக் கடைப்பிடித்து எமக்கும், எம் நாட்டிற்கும் ஏற்ற நற்பிரஜைகளை உருவாக்குவோம்.

*பரமேஸ்வரி கணபதிப்பிள்ளை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லாசிரியர்

குழந்தை ஒன்று தாயின் அரவணைப்பில் இருந்து நேரடியாக ஆரமபப் பாடசாலைக்கு வருகிறது. எனவே அன்புப் பிணைப்பிலிருந்து விடுபடாத குழந்தையை வரவேற்க ஆசிரியர் தன்னைத் தயார் செய்ய வேண்டியது அவசியமாகின்றது. ஏனெனில் தரமான ஆரம்பப்பள்ளி ஆசிரியர் குழந்தையின் வளர்ச்சியில் அதிக நாட்டம் கொண்டவராகவும் எல்லா வேளையிலும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் குழந்தையின் மேல் அன்பு செலுத்தத் தயாராகவும் இருக்கவேண்டும்.

தன் தாயின் அன்பை ஒத்த அன்பு கிடைக்குமிடத்திலும் தனது வீட்டுச் சூழலில் இருக்கும் பாதுகா புணர்ச்சி பாடசாலையிலும் இருக்கும் பட்சத்திலேயே குழந்தை பாடசாலைக்கு வருவதை விருப்பதுடன் நிறைவேற்றும். தனது தொழிலின் அல்லது செயற்பாட்டின் மூலமாகவே குழந்தை தன்னை மலரச்செய்து கொள்ளும்'' என்ற கோட்பாட்டில் ஆசிரியர் நம்புபவராக இருக்கவேண்டியது அவசியமாகும்.

எல்லாம் நேர்மையான குழந்தைகள் என்ற நோக்குடன் பாரபட்சமின்றி ஆசிரியர் நடந்துகொள்ள முயற்சிப்பதோடு ஆசிரியர் ஒவ்வொரு குழந்தைக்காகவும் காத்திருப்பது இன்றியமையாததாகும். ஆசிரியரின் செயல்கள் பிள்ளையின் படிமுறையான வளர்ச்சிக்கேற்ப சிறிது சிறிதாக வளர்ந்து செல்லவேண்டும் இத்தகைய படிகளை நாம் மூன்று நிலைகளாக வகுத்துக்கொள்ள முடியும்.

1. குழந்தையின் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்தும் வகையில் ஆசிரியர் அன்பும் பண்பும் நிறைந்தவராகச் செயற்படவேண்டும். வகுப்பறையை சுத்தமாகவும் ஒழுங்காகவும் வைத்திருப்பதன் மூலம் குழந்தையைக் கவரலாம்.

அதுமட்டுமன்றி ஆசிரியர் தன்னுடைய தோற்றம், மன அமைதி என்பவற்றிலும் அதிகக் கவனம் செலுத்தவேண்டும் ஆசிரியரின் அழகான தோற்றம், அமைதியான பேச்சு குழந்தையைக் கவரும். மொண்டிசோரி அம்மையார் குழந்தைகளிடம் செல்லும்போது ஓர் இளவரசனைக் காணச் செல்வதுபோல் தன்னைத் தயார் செய்து கொள்வார் எனச் சொல்லப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. ஆசிரியரின் தயார்ப்படுத்தலில் சுறுசுறுப்பு என்ற விடயம் இடம்பெறுகின்றது. சுறுசுறுப்பில்லாமல் சோர்வாக கடுஞ்சொற்களைப பேசும் ஆசிரியர் விரும்பத்தக்கவரல்லர். கதை சொல்லல். குழந்தைப் பாட்டுக்கள் பாடல். அபிநயங்கள் செய்து காட்டல் போன்றவற்றின் மூலம் குழந்தைகளைத் தன்வசப்படுத்த வேண்டும். ஆசிரியரின் ஒவ்வொரு செயலும் குழந்தையை ஏதாவது ஒரு தொழிலில் அல்லது செயலில் ஈடுபடத்தூண்டும் எனவே ஆசிரியர் எந்த வேளையிலும் அவதானமாக நடந்து கொள்ளவேண்டும். ஏனெனில் ஆசிரியரின் சிறு செயற்பாட்டையும் குழந்தை உன்னிப்பாகக் கவனித்து செயற்படுத்த முனைகின்றது.

3. குழந்தை முதன்முதலாக தனது கவனத்தை ஒரு முகமாக்கி செயற்படத் தொடங்குகின்றது. இவ்வேளையில் குழந்தையை தானாகச் செயயற்பட விட்டு அது தானாகவே அக்கறை கொள்ளும்வரை காத்திருந்து அறிமுகப்படுத்தல் காரியத்தில் ஈடுபடல் நன்மை பயப்பதிதான்றாகும். புலனறி கருவிகள், பண்பாட்டுச் செய்ம்முறைக் கருவிகள் என்பன இங்கு அறிமுகப்படுத்தப்பட வேண்டியவையாகும். குழந்தை தானாக ஒரு செயலில் ஈடுபட தூண்டிய பின்பு அதன் செயற்பாட்டில் ஆசிரியர் தலையிடக்கூடாது.

எனவே ஆசிரியர் செயற்பட தூண்டியபின் அவர்களை அவர்கள் அறியா வண்ணம் அவதானிக்க வேண்டும். புதுப் பொருளை அல்லது விடயத்தை அறிமுகப்படுத்துவது மட்டுமே ஆசிரியரின் கடமையாக கருதப்படல் வேண்டும்.

இவ்வாறான மூன்று நிலைகளில் ஆசிரியர் தன்னை தயார்ப்படுத்திக் கொள்வதன் மூலம் குழந்தையின் சிந்தனையை வளமாக்கி நேரிய வழியில் நடத்திச் செல்ல முடியும். குழந்தையை திறமையாளனாக எதிர்கால நற் பிரஜையாக உருவாக்குவது சாத்தியமாக்கப்பட மேற்கூறிய குணம்சங்கள் ஓர் ஆசிரியரிடம் இருக்கவேண்டியது அவசியமாகின்றது.

பப்சி டொமினிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞான வளர்ச்சினுல் ஏற்பட்ட நன்மைகளும் தீமைகளும்

*"Every advantage has its own disadvantage"*

ஒவ்வொரு நன்மையிலும் தீமையும் உண்டு என்ற உண்மைக்கிடையே விஞ்ஞானவளர்ச்சியில் நன்மைகளும் தீமைகளும் உண்டு.

அன்று எம் முன்னோர் கால்நடையாகவும் மிருகவண்டிகளிலும் பிரயாணங்களைச் செய்தனர் ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்குச் செல்ல இரண்டு மூன்றுநாள்கள் கூட ஆகலாம். ஆனுல் இன்றைய விஞ்ஞான வளர்ச்சியின் காலகட்டத்தில் புகைவண்டி, ஆகாயவிமானம் போன்ற போக்குவரத்துச் சாதனங்களை உபயோகித்து பல நூறு மைல்களைச் சில மணித்தியாலங்களில் பயணம்செய்யக்கூடியதாக உள்ளது. இதேநேரம் மின்சாரக்கோளாறு காரணமாக விபத்துக்கள் ஏற்படுகின்றன இன்றைய நாளில் மேற்கு ஜேர்மனியில் இத்தாலியவிமானங்கள் சாகசவிளையாட்டு ஒன்றை நடத்தின. விமானங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விமானிகள் கிடடத்தட்ட முப்பதுபேரும் பார்வையாளர்களும் முந்நூறுக்கு மேற்பட்ட பார்வையாளர்கள் காயமும் உற்றுர்கள்.

அன்று புறு மூலமும் மனிதர் மூலமாகவும் அனுப்பப்பட்ட செய்திகள் இன்று தபால், தந்தி தொலைபேசி, தொலைக்காட்சி, தொலைத்தொடர்புகள் மூலம் சில நிமிட நேரங்களில் அனுப்பப் படுகின்றன. அதேநேரங்கள் சில குழப்பங்கள் காரணமாக பிழையான தகவல்களும் அனும்பப்படுகின்றன.

கைத்தொழில்களை நோக்குமிடத்து பல மனிதர்கள் சேர்ந்து பல நாள்கள் முயன்றுதான் ஒரு வேலையைச் செய்யக்கூடியதாக இருந்தது. பெண்கள் எல்லாம் உணவுத் தேவைகளைத் பூர்த்தி செய்யத்தாமே மிகவும் கஸ்டப்படவேண்டியிருந்தது இன்று இயந்திரம், மின்சார உபகரணங்கள் கொண்டு சில நிமிடங்களில் நினைத்ததை உடனேயே செய்யக்கூடியதாக உள்ளது. இதற்குள்ளும் சிலரின் கவலையீனம் காரணமாக இறப்பும் ஏற்படுகிறது. அத்துடன் மின்சாரம் இல்லையேல் வேலைகள் யாவும் தாமதம் அடைகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று அதிக எண்களைக் கொண்ட கணக்குகளைச் செய்வதற்கு மனிதன் மிகவும் கஸ்டப்பட்டான். இன்று கணனி மூலம் உடனேயே கவனிக்கக் கூடியதாக காணப்படுகிறது.

அன்று கால நிலைகள் வானிலைகளை அறியாமல் இருந்த எம் முன்னோர் எத்தனையோ கஸ்டங்களுக்கும் விபத்துக்களுக்கும் உள்ளாகினர் இன்றைய விஞ்ஞானவளர்ச்சியில் மக்கள் முன் கூட்டியே அறியக்கூடியதாக உள்ளது.

மருத்துவத்தை எடுத்து நோக்குமிடத்து அன்று மருத்துவ வசதி இல்லாமல் பல நோய்களைக் கண்டு பிடிக்க இயலாமல் அநேகர் இறந்தனர் குழந்தைபேற்றுக் காலங்களில் கூட எத்தனையோ பெண்கள் இறக்க நேரிட்டது. குழந்தைச் செல்வம் இல்லாத பெண்கள் எல்லாம் மங்கள நிகழ்ச்சிகளில் ஒதுக்கி வைக்கப்பட்டார்கள். ஆனால் இன்று சோதனைக் குழாய் மூலம் குழந்தை பெற்று எடுக்கக் கூடிய முறையில் விஞ்ஞானம் வளர்ச்சியடைந்துள்ளது.

அன்று சந்திரனைவணங்கினார்கள், இன்று மனிதன் சந்திர மண்டலத்திலே காலடிவைத்துவிட்டான். எல்லாம் விஞ்ஞான வளர்ச்சியே.

அன்று மக்கள் இருள் கவ்வினால் கல்விகற்க முடியாது. எதுவுமே செய்வதில்லை. நிலவில் வேலைசெய்வார்கள். அல்லதுஓலைகள் போன்றவற்றை எரித்து பெறப்பட்ட ஒளியைப் பயன்படுத்தினார்கள். அடிமைத்தளையை அறுத்தெறிந்த அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஆபிரகாம்லிங்கன் வீதியோரத்து வெளிச்சத்திலேயே கல்வகற்ற கதையினை நாம் அறிவோம். பின்னர் படிப்படியாக அரிக்கன் லாம்பு உபயோகிக்கப்பட்டது. இன்று எங்குமே மின் ஒளியே இருந்தும் இன்று மின்பாவனை கவலையீனத்தால் எத்தனையோ மனிதர் இறக்க நேரிடுகிறது.

விஞ்ஞான வளர்ச்சியில் ஆயுத உற்பத்திமிகவும் விருத்தியடைந்துள்ளது. இதனால் விற்பனை அதிகரித்து நாட்டில் பணவீக்கம் ஏற்படுகிறது. இதேவேளை அவ் ஆயுதங்கள் பயன்படுவதால் நாட்டுமக்கள் ஏன் மக்களின் சொத்துக்கள் கூடஅழிக்கப் படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று பயிற்செய்கையின் போது செடி கொடிகளில் நோய் ஏற்பட்டால் அவற்றை அழித்துவிடுவார்கள் இன்று இரசாயனப் பொருட்களைப் பயன்படுத்தி மீட்டு எடுக்கக்கூடிய முறையில் விஞ்ஞானம் உதவுகிறது. இதேவேளை இரசாயனப் பசளைகள் மருந்து வகைகளினால் வளர்த்து எடுக்கப்பட்ட. காய்கறிகளை நாம் உண்பதால் அதிக நோய்கள் ஏற்படுகின்றன முக்கியமாக "கான்சர்" நோய் அதிகமாகத் தோன்றியுள்ளது.

தொழிற்சாலைகள் இயங்குவதனால் சூழல் மாசடைகிறது. இத னால் அயலில் உள்ள மக்களின் சுவாசத்தில் தூசு சென்று சுவா சப்பை நோய்கள் ஏற்படுகின்றன. எனவே விஞ்ஞானத்தினால் தீமைகள் ஏற்பட்டாலும் பலவிதமான நன்மைகள் நமது வாழ்க் கைக்கு வழிகாட்டுகின்றன.

அமிர்தகௌரி ஆலாலசுந்தரம்

## சித்திரமும் கல்வியும்

சித்திரத்தின் கைப்பழக்கம் சீர்திருத்தும் கல்வியினில் பின் னிப் பிணைந்தும் கற்பனையின் கதாபாத்திரம் எனவும் சித்தி ரத்தை கண்டு கொள்ளலாம். இன்றைய கல்வித் திட்டத்தில் உளவளர்ச்சியும் பழக்கங்களும் முதலிடம் பெற்றிருக்கின்றன உளம்வளர கலைக்கல்வி அளிக்கப்படல் வேண்டும். இதைத்தான் கல்வியின் அடிப்படைக்கலையாக அமைய வேண்டும். என அறி ஞர் பிளேற்றோ கூறியுள்ளார். கலை எனப்படுவது மனிதனு டைய வாழ்வைப்போல அவனின் உள்ளிருந்தே வளர்ந்து வரும் சுவை உணர்வியல் ஆகும். இவ்இயல்பு சார்ந்த அழகுக் கலைக ளுள் ஓவியம், சிற்பம், நடனம் ஆகியன கண் வழிச் சென்று உள்ளத்தை இன்புறச் செய்கின்றன. இசை, கவிதை என்பன செவி வழிச்சென்று உள்ளத்தை இன்புறச் செய்கின்றன. இயற் கையிலிருந்து பெறப்படும் அழகுணர்ச்சியாகிய முருகியல் புலன் வழிச்சென்று மனத்திலே இன்ப உணர்ச்சியை ஊட்டுகின்றது. இந்த அழகுணர்ச்சியாகிய ஊற்று வாயிலாக வழிந்தோடி வரும் இன்ப உணர்வை "தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற பெரு நோக்கோடு, வெளியிடும் ஆற்றலே உண்மைக் கலை யெனக் கருதப்படுகின்றது. எனவே கலை என்பது உணர்வின் பிர திபலிப்பேயன்றி இயற்கையின் பிரதிபலிப்பன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகுணர்ச்சியைக் கற்பனைச் செறிவுடன் தனித்துவம் மிளிர வெளியிடும் ஆற்றல் சிறுவர்களிடம் இயற்கையாகவே பொதிந்துள்ளது தங்கள் அக உணர்வுகளை பிரகாசமான வண்ணங்களை கொண்டு சித்திரங்கள் மூலம் சுவை உணர்வு குன்றாது வெளியிடுவதில் பேரார்வம் உள்ளவர்கள் சிறுவர்கள் இந்த ஆர்வம் எமது மூதாதையர் ஆகிய தொல்குடி மக்களிலிருந்து பெறப்படும் பாரம் பரிய பண்பு, அத் தொல்குடி மக்களும் இந்தப் பாணியில் குகை சித்திரங்களாக தங்கள் எண்ணத்தை தீட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது. இவ்வார்வத்தை ஒழுங்கான முறையில் வளர்த்து நெறிப்படுத்தி சிறுவர்களின் கலைக்கல்வியை சீராகப் பேணுவதன் மூலம் அவர்களை வாழத் தகுதி உடையவர்களாக ஆக்க வேண்டும் இது தான் கல்வியின் முக்கிய நோக்கமாகும்.

பா. பாலகுமாரி

## கற்பித்தலில் கட்புல, செவிப்புல சாதனங்கள்

ஒவ்வொரு தொழிலாளிக்கும் ஒவ்வொரு உபகரணம் தேவை அதேபோல ஒரு ஆசிரியருக்கு கற்பித்தல் சாதனம் அவசியமாகும். மாணவன் எதை அறிவதாக இருந்தாலும் புலன்கள் மூலம் தான் அறிந்து கொள்கின்றான். புலன்களின் தொழிற்பாடு குறைந்தால் அறியும் தன்மை குறைந்துவிடும். பார்த்தலுடன் அனுபவம் ஏற்படுகின்றது. புலக்காட்சியில் ஏற்படும் அவதானங்களினால் அனுபவம் ஏற்படுகின்றது.

மாணவர் தமது ஐம்புலன்களினால் பெறும் அறிவில் 80-85% கண்களால் அறிகின்றனர் 10-15% ஐ காதுகளால் அறிகின்றனர். மிகுதியினை ஏனைய புலன்களினால் அறிகின்றனர். ஆயிரம் சொற்களிலும் பார்க்க ஒரு படம் அர்த்தமுள்ளது என்றும், அதனை சொல்லுவதிலும் பார்க்க செய்து காட்டுவது மிகவும் சிறந்ததென்றும் கூறுவார்கள்.

ஒரு வகுப்பில் மிகத்திறனுள்ள மாணவன் இருக்கலாம். அதே நேரம் மந்தபுத்தியுள்ள பின்தங்கிய மாணவனும் காணப்படலாம். எனவே மாணவர்களுடைய தனியாள் வேறுபாடுகளுக்கிணங்க கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியருக்கு கற்பித்தல் சாதனம் மிகவும் அவசியமானதொன்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு ஆசிரியர் பயன்படுத்தும் கட்புல, செவிப்புல சாதனம் குறிப்பிட்ட பாடத்திற்கு ஏற்றதாக அமையவேண்டும் அத்துடன் அழகாகவும், தெளிவாகவும், கவர்ச்சிகரமானதாகவும் அமையவேண்டும் எடுத்துக்கொண்ட பாடவிடயத்திற்குப், வகுப்பிற்கும் ஏற்றதாக கற்பித்தல் சாதனம் அமையவேண்டும். அதிக அளவில் விலை கொடுத்து வாங்கிய பொருட்களாக அமையாது நாம் தேவையற்றதென வீசும் பொருட்களிலிருந்து சிக்கனமாகத் தயாரிக்கவேண்டும்.

ஆசிரியர் வகுப்பறையில் நாளாந்தம் உபயோகிக்கும் உபகரணம் கரும்பலகையும் வெண்கட்டியும ஆகும். பாடத்தை கவர்ச்சியாகவும், சிறப்பாகவும் நடாத்துவதற்கு உபயோகிக்கக் கூடிய கட்புல, செவிப்புல சாதனங்களை பின்வருமாறு நோக்கலாம்.

1. கரும்பலகை, வெண்கட்டி
2. உண்மைப்பொருட்கள்
   உ+ம்:- பழங்கள், ஆடை அணிகலன், பூக்கள்
4. மாதிரி உருவங்கள் MODELS
3. படங்கள் - தேசப்படங்களும், ஏனைய படங்களும்
5. அட்டவணைகள், வரைப ங்கள்
6. சமுதாயத்தின் மூலவளங்கள்
7. பள்ளிப்பொருட்காட்சி
8. நூல்நிலையம் - பார்வை நூல்கள், சஞ்சிகைகள்
9. ஆசிரியர் பயன்படுத்தக்கூடிய விஞ்ஞான தொழில்நுட்ப கருவிகள்
   உ+ம்:- வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம்
   ஒலிப்பதிவு நாடா,
   மேலூடு காட்டி [Over Head Projector]
10. கல்வி ஒலிபரப்பு
11. சுற்றுலா
12. வெளிக்கள வேலை
13. நாடகம்

மாணவர்களது சிந்தனையைத் தூண்டும் வகையில் இரசிப்புத் தன்மையை ஏற்படுத்தி சிறந்த கற்றல் கற்பித்தல் தொழிற்பாடு நடைபெறுவதற்கு கட்புல செவிப்புல சாதனங்கள் சிறந்த பங்கை வகிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கற்பித்தலுக்கு நடனத்தின் பங்களிப்பு

ஆரம்ப மாணவர்களின் உடல், உள வளர்ச்சிக்கும் மாணவர்களின் பிற்காலவளர்ச்சிக்கும் படிக்கட்டுக்களாக நடனம் அமைகின்றது. எவ்வாறு தேகப்பியாசம் உடலை ஆரோக்கியமாக வைத்திருக்கின்றனவோ அவ்வாறே நடனக்கலை பயில்வதால் உடல் உறுதியும் கட்டமைப்புடையதுமாக வளர்கின்றது. கைவழி நயனம்செல்ல கருதும் ஒருமைப்பாடடைவதால் சிந்தனையாவற்றையும் ஒன்றுபடுத்தும் அருள்கலையாக விளங்குகின்றது. மாணவர்களது பிற ஊக்கத்தை தடுத்து நற்பிரஜையாக ஒரு முழுமையான ஐம்புலப்பயிற்சியைப் பெற்று ஆளுமையுடையவர்களாக வளர்வதற்கு நடனம் ஏதுவாகின்றது.

குழந்தையை மையமாகக் கொண்ட கல்வி இறற்கையோடு இணைந்த கல்வியாகும். ஒன்றிணைக்கப்பட்ட பாடத்திட்டத்தை செயற்படுத்த நடனம் உதவுகின்றது. நடனத்தை முன்பு ஒரு குறிப்பிட்டவர்களே கற்றுவந்தனர். ஆனால் இன்று பாடசாலையில் கலைத்திட்டத்தில் ஓரு பாடமாகவுள்ளது. இக் கல்வியில் மாணவர்கள் நடனத்தை பயில்வதன் மூலம் பிற்காலத்தில் ஒரு சில மாணவர்கள் தேர்ச்சியுடையவர்களாகவும் ஏனையோர் ரசிகர்களாக உருவாகவும் வழிசெய்கிறது ஆரம்பக்கல்வியில் சிறு சிறு பாடல்களை அபிநயங்கள், முகாபாவங்கள் லயங்களுடன், கற்பதற்கு ஏதுவாகின்றது. இசைக்கேற்ப அசையும் தன்மை கொண்டு வளர்கிறார்கள் மாணவர்கள் இடைநிலைக்கல்விக்கு சென்று சாஸ்திர ரீதியாக கற்பதற்கு படிக்கட்டுக்களாக அமைகின்றது.

நடனம் பாவம், ராகம், தாளமாக சேர்ந்து மாணவர்களின் ஜீவனாக அமைகின்றது. நவரசங்களை வெளிப்படுத்த முகபாவம் உதவுகின்றது. சிறு பாடல்களை இசையும் அசையுமாக கற்பித்தல் மூலம் மாணவர்கள் இசையையும் நடனத்தையும் கற்க உதவுகின்றது. 14 ஊக்கங்களினூடாக கற்பீக்க உதவுகின்றது. வீரமுள்ள பாத்திரத்தை மாணவன் செய்துவரும்போது நாளடைவில் வீரனாகமாறமுடியும் இசைக்கேஏற்ப கைகளை தட்டுவதன் மூலம் லயத்தை அறிந்து ஒழுங்காகவும் கட்டுப்பாடுடையவர்களாகவும வளர்கின்றார்கள். பாடலுக்கேற்ப கும்மி ஆடுவதன் மூலம் லயத்தையும் தாளப்பயிற்சியையும் மாணவர்கள் பெறக்கூடியதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடனம் செயல்முறையாக இருப்பதால் மாணவர்கள் அமைதியும் ஆனந்தமும் அடைவர் பாடல்களுடன் சிறு நாடகங்களை கற்பிக்கலாம். முகபாவமில்லாத அபிநயம் உயிர்த்துடிப்பற்ற இயந்திர செயல்களாக காணப்படும். அசைவிலிருந்தே அண்டங்கள் தோன்றின. இறைவன் ஆடிக்கொண்டிருப்பதாலே அண்டசாஸ்திரங்களின் தோற்றங்கள் வளர்ச்சிக்கு மூலகாரணம் எனப்படுகின்றது. மனிதனது தெய்வீகக் கலையாகும். ஆத்மஈடேற்றத்துக்கும் வழியாக உள்ளது. நடனமானது எல்லோருக்கும் பயனளிக்ககூடிய கலையாக விளங்குகின்றது. மாணவர்களை ஊக்குவிப்பது. அவசியமாகும். மனிதஉடல் உளவளர்ச்சிக்கு நடனத்தின் பங்கு முக்கியமானது சிறுவர்களுக்கு நடனம் முக்கிய படியாக அமைந்துள்ளது.

சுப்பிரமணியம் ஜெகதீஸ்வரி.

---

ஒரு தாயானவள் 100 குழந்தைகளைக் காப்பாற்ற முடியும். ஆனால் 100 குழந்தைகளால் ஒரு தாயைக் காப்பாற்ற முடியாது

புதிய சமுதாயத்தைக் கருப்பையில் கொண்டிருக்கும் பழைய சமுதாயத்தினதும் மருத்துவிச்சி, பலாத்காரம் தான்.

- கார்ல் மாக்ஸ் -

மனைவியின் அன்பினாலும் குழந்தையின் மயக்கும் புன்னகையாலும் தான் ஒருவன் தன் துன்பம் நிறைந்த நிலையை மறக்க முடிகிறது.

- C. கால்ட்டன் -

அடிமைகளில் மட்டமானவன் உணர்ச்சிகளுக்கு அடிமைப் பட்டவனே

- புரூக் -

பணக்காரன் ஆவதற்கு பணத்தைக் குவிக்க வேண்டும் என்பதில்லை. செலவுகளைக் குறைத்துக் கொண்டாலே போதும்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதந்திர வாழ்வு

சின்னச் சின்னக் குருவிகள் - நாம்
சிறிய நல்ல குருவிகள்
பட்டு மேனிக் குருவிகள் - நாங்கள்
பஞ்சு மென்மைக் குருவிகள்

ஊர் ஊராய்ப் பறந்திடுவோம்
உண்ண உணவு தேடுவோம்
உறவுடன் நாம் மகிழ்ந்துமே
உரிமையுடன் வாழுவோம்.

பட்டம் இல்லை பதவி இல்லை
பணமும் இல்லை பவிசும் இல்லை
பஞ்சம் இல்லை பாவம் இல்லை
பாரில் பகையும் இல்லையே

வீடு இல்லை விசனம் இல்லை
வீதி தோறும் முகாமும் இல்லை
விண் வழியே பறந்து செல்வோம்
விரைந்து பறந்து செல்லுவோம்

போட்டி இல்லை போரும் இல்லை
பொறுமை இல்லை வறுமை இல்லை
பொட்டு இல்லா நெற்றி இல்லை
புன்னகையே எமது வாழ்வில்

சாதி இல்லை வேலி இல்லை
சமயம் இல்லை சலனம் இல்லை
சந்தத்தோடு பாடிச் செல்வோம்
சந்ததமும் கூடிச் செல்வோம்

எங்கெங்கும் பறந்து செல்வோம்
எம்மினத்தைக் கூட்டிச் செல்வோம்
எம்மினத்தைப் பார்த்து நீங்கள்
ஏங்கிடவே வாழ்ந்து நிற்போம்

*ஜெயமணி வைத்திலிங்கம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பறவைகள்

பாடிச் செல்லும் பறவைகளே
பாங்காய் நீங்கள் பறக்கையிலே
கோடி அழகு தெரிகிறதே
கொஞ்சும் ஆசை வருகிறதே

கிள்ளை மொழி பேசும்
கொள்ளை இன்பக் கிளியேயுன்
பச்சை மேனிக் கோலம்
பாடச் சொல்லித் தூண்டுதே

ஆடும் கொள்ளை அழகாலே
அணைக்கத் தெரிந்த மயிலே நீ
பட்டுச் சட்டை போட்டதனுல்
பாலர் மனதில் இருக்கின்ருய்

கு சசிக்கா.

★

## ஆசானுக

தாயைப் போல உண்மை அன்பை ஊட்டுவோம்
தந்தை போல உயர் அறிவை ஊட்டுவோம்
இருபது நாட் பயிற்சியிலே பல்கலை பெற்ருேம்.
இதுவரை யாம் பெற்றவற்றை செயற்படுத்துவோம்

உடலோடு உள்ளமதை உறுதியாக்குவோம்
உண்மையோடு ஊக்கமதை ஊட்டி வளர்ப்போம்
பண்பிலுயர் பிள்ளைகளைப் பாதைகாட்டுவோம்
பட்டுப் போன்ற அவர்களை யாம் பண்படுத்துவோம்

வருங்கால சமுதாயம் சிறுவர் கையிலே
வழுவின்றி வழிவகுப்ப தெங்கள் பணியிலே
ஒற்றுமையோ டொரு வயைழி உண்டுபண்ணுவோம்
ஒன்று குலம் ஒன்று தெய்வம் என்று ஆக்குவோம்

ராயப்பு தர்மினியசிந்தா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுச் செடிகளுக்கு நீரூற்றி...

அன்றைய நாள்களில்
சின்னஞ்சிறு பறவையின்
சிறகுகளை...
எட்டாத தூரத்தில் விரித்து
அண்டவெளியெங்கும்
அந்தரத்தில் பறந்து
எதிர்காலக் கற்பனைகள்
எண்ணங்களாகி
இதயத்தை நிறைக்க......
குறு குறு நடந்து
சிறுகை நீட்டி
சிப்பியெடுத்து
சிறு சமையல் செய்து
இயற்கையின் எழிலை
இதயத்தில் ஏந்தி
தென்றலின் மென்மையும்
பசுமையின் எழிலும்
மனத்தை அள்ள
மணலால் கோலமிட்டேன்!

அந்த் நாளில் என் இதயம்
பசுமையாக இருந்தது!
அதிகாலைப் பனித்தூவலில்
மனம் சிலிர்த்தேன்
பூக்களுக்கு முத்தம் தந்தேன்
தென்றலுக்கு தூது விட்டேன்
முகிலுக்கு கவிதைசொன்னேன்
சின்னக் குருவிகள்
சொன்ன கதைகளில்
என்னைப் பறிகொடுத்தேன்
காலைக்குயிலின்
பூபாளம் கேட்டு
கண்விழித்தேன்
மாலைநேரச் சூரியனை – என்
மகிழ்ச்சிக்கு மாலையாக்கினேன்
என் நெஞ்சமெல்லாம்
இனிமையளித்த -
அந்த இளவேனில் பொழுதில்
நான் -
எப்பொழுதும் சிரித்திருந்தேன்
இன்றோ – குழந்தைப் பருவம்
எனை விட்டு வெகு தூரம்
விலகிச் சென்றுவிட
மீண்டும் –
தென்றலின் மென்மைக்காய்
தெம்மாங்கு பாடும்
குயில்களின் குரலுக்காய்
ஏங்கித் தவிக்கிறேன்

என் சின்னப்பருவத்து
கீதங்கள் இப்போது
சுருதிகலைந்துபோக – – – –
நான் முத்தமிடும்
மலரெல்லாம்
என் துயரத்தின் வெம்மை
தாங்காது
உதிர்ந்து போய்விட - நான்
மனநோடு துவண்டு
போகின்றேன்.
அந்த நாளில் என்னைத்தழுவிய
தென்றல் இன்று
கொடும்புயலாக
நான்
என் நினைவுச் செடிகளுக்கு
நீரூற்றிக் கொண்டிருக்கிறேன்.
இன்று —
சுற்றத்தவரின் கண்ணீருக்காக
சுமைகளுக்காக
சொந்தங்களுக்காக
சோதனைகளுக்காக
துயரப் படுகையில்—
தென்றலின் மென்மையும்
முகிலின் வெண்மையும்
என் மனத்தை விட்டு
வெகுதூரம் அகன்றுபோக
இந்த
அதிகாலையின் பனித்தூவலில்
எந்த சிலிர்ப்பும்
சந்தோசமும் இன்றி
நான்—
இன்னோர் இளவேனிலுக்காய்
அழுது கொண்டிருக்கிறேன்.

பா. பாலசதாமணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுகப்பிரசவம்

ஆற்று மணலில்
அவள் அடிச்சுவடுகளை
தேடுகிறேன்
இதயத்தில்
பச்சை குத்திய
உறவுகள் நிலைத்த
நாள்களையும்
உதயத்தில் மறைந்த
இரவுகளையும்
கணக்குப் பார்க்கும்
நேரம் வந்தாயிற்று
என்னுடைய கனவுகளை
அவளிடம் அடைவு
வைத்து விட்டேன்
குத்தகைப் பணம்
கட்டும் திகதியை
அவள் தான்
நிர்ணயிக்க வேண்டும்
விதவை விழிகளில்
அநாதைக் கண்ணீர் மட்டும்
அநாதையாகி விட்டன
இந்தக் கவி
மஞ்சள் தரித்து
விழியோரச் சகதியில்
உபவாசம் இருக்கிறுன்
என் காதலுக்கு இனி
எப்போது சுகப்பிரசவம்?

## தன்மானம்

வாழும் சூழலில்
கோடியெல்லாம்
தேடியும்
காணவில்லை
புறப்படு மனிதா
புறப்படு
புரிந்துணர்வு
தன்மானம்
அவை ஒளிந்திருக்கும்
மறைவிடத்தை
யாபேரும் இணைந்து
தேடுவோம்
ஏழ்கடலில் தேடுவோம்
முடியாதாயின்
முயன்றிடுவோம்
அணுவைப் பிளக்க

❀

குயின் சயிலா தேவசகாயம்

---

ஒரு செடி வளர்வதற்கு என்னென்ன தேவையோ அதே போன்று மனித பண்பாட்டை வளர்க்க கல்வி அவசியம்.
ரூஸோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓ கவிதையே...

ஓ
கவிதையே
உன்னைக்
காணுமல்
காத்திருந்தேன் ; ஆனுல்
நீயோ - - - -

கணக்கு
என்றுல்
கணக்காக
வந்துவிடும்
பிரயோகம்
என்றுலும்
பிரயோக கணிதத்தில்
புகுத்தி விடலாம்; ஆனுல்
நீயோ - - - - - -

பௌதிகத்திலும்
இரசாயனத்திலும்
காணுத புதுமையை
உன்னில்
காண வந்தேன்; ஆனுல்
நீயோ - - -

ஓ
கவிதையே
நீ
காட்சியும்
கவர்ச்சியுமாய்
என்
கண்ணில்
தெரிவதை
நான்
உணரவில்லையே,
களைத்து திரிந்து
கம்பஸினுள்
நுழைந்ததும்
கவிதை பாட
தயாரானேன்
ஆனுல்
அங்கும்
தூய கணிதம்
பிரயோக கணிதம்
புள்ளிவிபரவியல் — என்று
கணக்காக
கண்டு
கழித் தேன்

ஓ
கவிதையே
கவிபாட
காத்திருந்தேன்
கானல் நீராய்
கலந்து போனேன் ஆனுல்
நீயோ - - - -

*சித்திஷாலிகாஜஸ்மின் மொகமட்இக்பால்*

---

வாழ்க்கையைப் பயிலும் சாதனமே கல்வி

வில்டமோ

உலகிலேயே கல்வி முக்கியமானது மட்டுமல்ல. அதிசயமான மாற்றங்களையும் உண்டுபண்ணக் கூடியதாகும்.

ஜே. ரங்கிஸன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்று சேருவோம்

சாதித் திமிரினைப் போக்குவோம் — பொல்லாச்
சண்டாளர் பேச்சினைத் தாக்குவோம்
நீதி நெறியினைச் சொல்லுவோம் - இந்த
நித்திலத்தில் நீசங் கொல்லுவோம்.

ஆதியில் சாதிகள் ஏதடி — இந்த
அநியாய மெப்படி வந்ததோ?
பாதியில் வதந்திச் சாதியால் — கொடும்
பாவங்கள் நேர்வதோ சொல்லடி.

வாசஞ் சொரிகின்ற பூக்களை — இந்த
வையகந் தள்ளுதல் இல்லையே
பாசம் வளரன்பு நெஞ்சங்கள் – பணத்
தாசையால் தீய்வது ஞாயமோ?

வாருங்க ளொன்ருகச் சேருவோம் — எங்கள்
வாழ்க்கையை மாற்றியே காட்டுவோம்
தாருங்கள் சீதனம் என்றிடும் — பேடித்
தனமுள்ள ஆண்களைத் தள்ளுவோம்.

இ. யசோதா

## எங்கள் செல்வம்

வண்ண வண்ணப் பூக்களாய்ப்
பள்ளிச் சிறுவர் வருகையில்
கொள்ளை இன்பம் கூடுது.
கோடி மகிழ்ச்சி பெருகுது.

பூங்காவில் மலர்ந் திடும்
புதிய மலர் போன்றவர்
எங்க ளது மனசிலே
இடம்பிடித்து நிற்கி ருர்

பிள்ளைகளைக் கண்ட தும்
பறந்து விடும் துன்பமே
கள்ளமிலா அவர் முகம்
களிப் பெமக்கு ஊட்டிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்ல மொழி பேசியே
துள்ளி வரும்போதிலே
அள்ளிக் கொஞ்சத் தூண்டுது
ஆசை மனசு ஏங்குது

குறும்பு அவர் செய்கையில்
கோபம் ஏதும் இல்லையே
எறும்பு போலச் செயற்படும்
எங்கள் செல்வம் அவர்களே.

பே சுஜாத்தா.

## கல்லறை

இந்த உலகில்
மனிதன் அழுது கொண்டு
பிறப்பதினுல் தான்
மற்றவனை அழவைப்பதில்
அவனுக்கொரு
தனி இன்பம்
இன்பம்
கிடைக்க வேண்டும்
என்பதற்காகத் தான்
மனச்சாட்சியை
அடைவுவைத்து விடுகிறுன்
மனச் சாட்சியை ...
அடகு வைத்ததனுல் தான்
எதை ஏன் செய்கிறோம்
எனத் தெரியாது
பாவ மாளிகைக்கு
கல்லறை எழுப்புகிறுன்
பாவத்திற்கு கல்லறை
எழுப்பியதால் தான்
அவர்கள் மனங்களும்
பாறைக் கற்களாகின்றனவோ?

சசிகலா வைத்திலிங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாம் யார்க்கும் குடியல்லோம்

ஈழத் தமிழினமே – இந்த
இக்கட்டான சூழ்நிலையிலே – நாம்
நன்கு ஆழ்ந்து சிந்திப்போம்
நாம் யார்கும் குடியல்லோம்.

வீரங் கொண்ட தமிழினமே
விரைவாய் எழுந்து செயற்படு
இன்னுமா தூங்குகிறீர்—வாருங்கள்
இணைந்து நின்று செயற்படுவோம்

மானமுள்ள தமிழினமே—இந்த
மாண்பு மிக்க பூமியிலே
நன்றியுடன் வாழ்ந்திடுவோம்—இனி
நாம் யார்கும் குடியல்லோம்

ஈழத் தமிழி னமே – நாம்
இணைந்தொன்றாய்ச் செயற்படுவோம்
வேளை எமக் குண்டு—நாம்
விரைந்து செயற்படுவோம்.

கமலாதேவி கந்தையா.

---

கல்வியானது அறிவு உணர்வு செயற்திறன் என்பவற்றை பிறப்பிக்க வேண்டும்.

பெஞ்சமின் புளும்

அச்சமின்றி அறிவோடு கலந்த அன்பு வாழ்க்கையைக் கற்றுக் கொடுப்பதுதான் கல்வியின் நோக்கம்.

பேட்ரணட்ரஸல்

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவில் நின்றது...

அன்றைய வைகறைப் பொழுது
ஆம் விடுதலைப் பொழுது......
சேவலின் கூவல்
குருவியினங்களின் இசையமுதம்
துயில் எழுந்தாள் ஈழத்தமிழ் அன்னை

வைகறை நீராடலுக்காகச் செல்கின்றாள்
விண்ணிலிருந்து வரும் பேரிரைச்சலைக்
கேட்டு, அண்ணாந்து பார்க்கிறாள்
பருந்துகள் வட்டமிடுவது போல்
வானவெளியில் ......... வட்டமிடுகின்றன
ஏங்குகிறாள் தமிழ் அன்னை
மனம் தவிக்கின்றாள்

எங்கிருந்தோ ஒரு சத்தம்
அவள் காதைப் பிளந்தது
அவனும் காலைத்துயில் கலைந்து எழுகின்றான்.
அவன் தமிழ் அன்னையின் இளையமகன்
அவன் அண்ணன்மார் இருவர் - எண்பத்துமூன்றில்
உயிரற்ற உடலையே காண
முடியாத நிலை... ......
மீண்டும் காதைப்பிளக்கும் வேட்டுக்கள்
நிகழப் போவது தெரியாது... ...
தவிக்கும் மனநிலையில் அவள்......

வீடுகள் சேதமுறுகின்றன.........
கட்டிடங்கள் உடைகின்றன.........
மரணத்தின் வாசலில் சிலர்...... ...
உயிருக்காகப் போராடும் சிலர்...... ..

மனச்சுமைகள் அகன்றுபோக......
விடுதலைக் காற்றை நுகர்ந்து
விடுதலை ஒன்றே உடைமையாய்
'அச்சமில்லை! அச்சமில்லை! அச்சமில்லை!
உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும்.........
என்றே'' ...... வரிகளிட்டு......
புறப்படுகின்றான்.........
அவன் பாதையை நோக்கி.........
அவன் அன்னை! பார்த்திருக்கின்றாள் ......

விஜிதா தனபாலசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்புவழி

அடிமைத் தளைகள் நீக்கிடுவோம்
அன்பின் வழியில் வளர்ந்திடுவோம்
வர்க்க பேதம் நொருக்கிடுவோம்
வையக மீதில் வளம் பெறுவோம்.

உண்மைகள் பேசி உயர்ந்திடுவோம்
ஊரவர் போற்ற வாழ்ந்திடுவோம்
கண்ணியம் கடமை சேர்த்திடுவோம்
கயமைகள் போக்கி நலம் பெறுவோம்.

தியாக வேள்வி நடத்திடுவோம்
தீரர் செயல்தனைப் போற்றிடுவோம்
உதவிக் கரங்கள் நீட்டிடுவோம்
உலகிற்குண்மை உணர்த்திடுவோம்

மா. நவநீதமணி

## பூக்கள்

வண்ண வண்ண பூக்களாம்
வடிவு மிக்க பூக்களாம்
தொட்டுத் தொட்டுப் பார்க்கவே
தொங்கும் வர்ணப் பூக்களாம்

எங்கள் வீட்டுத் தோட்டத்தில்
இருக்கும் நல்ல பூக்களாம்
பஞ்ச வர்ண நிறங்களில்
பரந்து நிற்கும் பூக்களாம்

காலைக் கதிரின் ஒளியினால்
கருணை பொழியும் பூக்களாம்
கடவுள் பாதம் ஏற்றியே
கை தொழுவோம் நாங்களும்

அன்புத் தம்பியும் நானுமே
அழகாய்த் தொடுத்த மாலையை
ஐங்கரனின் தம்பிக்கு
அணிந்து என்றும் போற்றுவோம்.

மனோகரி சோமசுந்தரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏனிந்த நிலைமை

நீலம் செறிந்த நீளுடலைக் கண்டே
　　நெஞ்சம் கலங்குதையோ - இந்தக்
கோலம் எழுந்திடக் கொல்லும் விஷத்தை நீ
　　கூடிக் குடித்தனையோ?

தத்தளிக் கின்றவுன் தாழ்வினைக் காணவோர்
　　சஞ்சல மாகுதையோ - நல்ல
பண்புள்ள வுன்னெஞ்சில் பித்தநிலை அள்ளி
　　வைத்தவர் யார டியோ?

ஊசியினால் நஞ்சை உன்றன் உளந்தனில்
　　ஊட்டி னரோ சொல்லு - இங்கு
பேசிப் பழகியே ஆசையினால் வலை
　　வீசிக் கொடுத்தன ரோ?

வெள்ளைநுரை தள்ளி வீழ்ந்து எழுந்துமே
　　வீருப்புக் கொள்ளு கின்றாய்
துள்ளத் தொடர்த்துபின் கள்ளைக் குடித்து நீ
　　சோர்ந்தெழு கின்ற னையோ?

உப்பை உள்ளந்தனில் வைத்திருக் கின்றதால்
　　ஊறு விளைவித்த துவோ?
அச்சந் தருமொலி யோடுசத்த மிடில்
　　ஆறுதல் எப்பொ ழுதோ?

— என். ஆனந்தராணி —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிற்சிப் புலத்தில்...

## அலுவலர் —

நிலைய மேற்பார்வையாளர் : திரு. V. பாலசுந்தரம், அதிபர். யாழ். மத்தியகல்லூரி.

நிலைய மேற்பார்வை உதவி: திரு K. கந்தசாமி, துணைஅதிபர், யாழ் மத்தியகல்லூரி.

கல்விப்பணிப்பாளர் பிரதிநிதி : திரு B. S. சர்மா, கல்விஅதிகாரி, கல்வித்திணைக்களம், யாழ்ப்பாணம்.

இணைப்பு அலுவலர் : திரு S. C. S. சிதம்பரநாதன், கல்விவள நிலையம், கோப்பாய் கல்விவட்டாரம்.

விடுதிப் பொறுப்பாளர் : திரு. R. தர்மகுலசிங்கம், யாழ், மத்தியகல்லூரி.

## விரிவுரையாளர் —

தொழிற்கல்வியும் பொதுக்கல்வியும் :

திரு. S. சிவநாயகமூர்த்தி, B. A, Dip -in - Edu, S. L. E. A. S. — கல்விஅதிகாரி, யாழ். கல்வித்திணைக்களம்.

திருமதி. T. திருச்சிற்றம்பலம் B. A. Dip - in – Edu. S. L. E. A. S. — விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரியர் கல்லூரி.

திரு. S. வேங்கடேசசர்மா B. A (HONS), Dip- in - Edu. — ஆசிரியர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்.

திரு V. துரைரத்தினம். B. Sc, Dip – in Edu. — ஆசிரியர் யாழ், மத்தியகல்லூரி.

உடற்கல்வி:

திரு. K. யதுகுலசிங். P. E. Tr, S. L. E. A. S — விரிவுரையாளர், பலாலிஆசிரியர் கல்லூரி,

திரு. V K. கணபதிப்பிள்ளை. P. E. Tr, — ஆசிரியர், நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி.

திருமதி. K. புவிராஜசேகரம் P E. Tr, — ஆசிரியர், சண்டிலிப்பாய் ம.வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கவின்கலை:**

திரு. L திலகநாயகம்போல், சங்கீதபூஷணம், — ஆசிரியர், யாழ் மத்தியகல்லூரி.

திருமதி. N. நாகராஜன். சங்கீதபூஷணம். — ஆசிரியர், யாழ்- கொக்குவில் இந்துக்கல்லூரி.

திருமதி. K. மயில்வாகனம். Dip - in – Dance, — விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரியர்கல்லூரி

திருமதி. K. கோபாலசுந்தரம், சங்கீதரத்தினம் — ஆசிரியர், யாழ், அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலை.

திரு. N. S. கந்தசாமி, Dip – in - Art. — ஆசிரியர் வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி.

திருமதி. சி. புஷ்பநாதன் Sp. Tr. Art — ஆசிரியர், இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்.

**இலக்கியநயம்:**

திரு. K. கனகசிங்கம், — ஆசிரியர், யாழ், இந்துக்கல்லூரி யாழ்ப்பாணம்.

*விஷத் துணுக்குகளை முளையில் திணிக்கச் செய்வது கல்வியல்ல.*

பிளேட்டோ

*முடியாது என்பது உன் அகராதியில் கிடையாது என முடியும்வரை முயற்சிசெய் நிச்சயம் வெற்றி உனதே*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவுத் தடத்தில்......

| | |
|---|---|
| அகஸ்யா கணேசமூர்த்தி | கோகுலவீதி,<br>கோண்டாவில் வடக்கு,<br>கோண்டாவில். |
| அருட்சோதி பொன்னையா | பன்றிக்கேணி வீதி<br>சாவகச்சேரி வடக்கு,<br>மீசாலை. |
| அமிர்தகௌரி ஆலாலசுந்தரம் | ஆவரங்கால்,<br>புத்தூர். |
| அனுஷ்சாந்தி பாலேந்திரன் | 134, 4/ம் குறுக்குத்தெரு/ஆ<br>யாழ்ப்பாணம். |
| ஆனந்தராணி நாகேந்திரன் | மகாத்மாவீதி, நெல்லியடி<br>கரவெட்டி, |
| இரஞ்ஜினி கனகலிங்கம் | நவரட்ணராஜாவீதி,<br>கோண்டாவில் |
| இன்பரதி கந்தசாமி | பெரியதாயகம்,<br>இடைக்குறிச்சி, வரணி. |
| உதயராணி தம்பிப்பிள்ளை | அச்சுவேலி வடக்கு,<br>அச்சுவேலி. |
| உதயகமலம் தில்லையம்பலம் | கைதடி வடக்கு,<br>கைதடி. |
| கமலவதனி கந்தையா | 39/4A மின்சார நிலையவீதி,<br>3 ஆம் ஒழுங்கை,<br>யாழ்ப்பாணம். |
| கண்மணி இரமநாதன் | வாட் இல 15<br>நெடுந்தீவு கிழக்கு<br>நெடுந்தீவு. |
| கனகேஸ்வரி பொன்னுத்துரை | நாவற்குழி கைதடி |
| கலாபாரதி சின்னத்தம்பி | மட்டுவில் தெற்கு<br>சாவகச்சேரி |
| கமலேஸ்வரி சந்திர குமார் | மட்டுவில் தெற்கு<br>சாவகச்சேரி |
| கமலாவதி செல்லத்துரை | நாகர் கோவில் வீதி<br>எழுதுமட்டுவாள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| கலையரசி சோமசுந்தம் | 1227 (669) K.K.S வீதி<br>யாழ்ப்பாணம் |
| கமலாதேவி கந்தையா | நாவலர் தெரு<br>மாதகல் |
| கிறிஸ்ரர் லோஜினி பியற்றிஸ் சந்தியாகோ | No 14 இராசேந்திரா வீதி<br>யாழ்ப்பாணம் |
| குயின் சயிலா தேவசகாயம் | 85 ஸ்ரான்லி வீதி<br>யாழ்ப்பாணம் |
| குமுதினி தம்பிராசா | கலட்டி<br>அச்சுவேலி தெற்கு<br>அச்சுவேலி |
| கோமதி சோமசுந்தரம் | புன்னாலைக்கட்டுவன் தெற்கு<br>சுன்னாகம் |
| கோமதி பொன்னம்பலம் | கொக்குவில் மேற்கு, அரசடி<br>கொக்குவில். |
| கௌரி முத்துக்குமாரசாமி | மணிபல்லவம்<br>கைதடி தெற்கு,<br>கைதடி. |
| சரஸ்வதிப்பிள்ளை கந்தையா | நாவல்காடு,<br>வரணி. |
| சசிகலா வைத்திலிங்கம் | பிள்ளையார் கோவிலடி,<br>கோப்பாய் வடக்கு'<br>கோப்பாய். |
| சசிக்கா குணசிங்கம் | 3 பலாவீதி<br>யாழ்ப்பாணம். |
| சரோஜா செல்லப்பா | கல்வயல்,<br>சாவகச்சேரி. |
| சசிகலா வேலும்மயிலும் | நவற்கிரி,<br>புத்தூர். |
| சகுந்தலை கதிர்காமர் | கரம்பைக்குறிச்சி,<br>வரணி. |
| சத்தியா சிவபாதம் | புன்னாலைக்கட்டுவன் தெற்கு<br>சுன்னாகம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| ச. கருணாகரன் | 10, சட்டநாதர் வீதி<br>நல்லூர் |
| சாந்தநாயகி வேலாயுதம் | பயித்தோலை அச்சுவேலி<br>தெற்கு<br>அச்சுவேலி |
| சிவகௌரி சிவராஜா | 103 செங்குந்தா வீதி,<br>திருநெல்வேலி கிழக்கு,<br>நல்லூர். யாழ்ப்பாணம். |
| சிவலீலாதேவி வடிவேலு | புத்தூர் மேற்கு,<br>புத்தூர். |
| சிலோனி செல்லத்துரை | 98 அம்பனை<br>சுன்னாகம் மேற்கு, சுன்னாகம். |
| சித்திரா இரத்தினம் | இந்திரதேவி வாசா<br>பலாலிவீதி,<br>திருநெல்வேலி வடக்கு,<br>யாழ்ப்பாணம். |
| சுஜாத்தா பேரின்பநாயகம் | பொற்பதிரோட்,<br>கொக்குவில் கிழக்கு. |
| சுதமதி இராஜரட்ணம் | வரணி வடக்கு,<br>வரணி. |
| க. சுப்பிரமணியம் | புலோலிகிழக்கு வராத்துப்பளை<br>பருத்தித்துறை. |
| சுபத்திரா கந்தசாமி | யோகஸ்தான்<br>கரணவாய் தெற்கு<br>கரவெட்டி |
| சுசீலாம்பாள் கந்தையா | கண்டிரோட்<br>சாவகச்சேரி |
| சுந்தராம்பாள் சுப்பிமணியம் | வெற்றிலைக்கேணி முள்ளியான் |
| க. செல்வரட்ணம் | வசந்தபுரம்<br>இளவாலை |
| செம்மனச்செல்வி திருநாவுக்கரசு | 2ஆம் வட்டாரம்<br>நயினாதீவு |
| செல்வராணி செல்லையா | 85, பருத்தித்துறை வீதி<br>நல்லூர் சந்தை<br>யாழ்ப்பாணம். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| சொபியாவதனி தார்சீசியஸ் | 30 புதுமைமாதா கோவில்வீதி<br>யாழ்ப்பாணம் |
| சோதிமலர் கந்தையா | கரம்பக்குறிச்சி<br>வரணி |
| இ. ஞானேஸ்வரன் | உரும்பிராய் கிழக்கு<br>உரும்பிராய் |
| ஞானமலர் சித்திவிநாயகமூர்த்தி | கதிரிப்பாய்<br>அச்சுவேலி |
| தர்மினி யசிந்தா இராயப்பு | 22/4 சென்பற்றிக்ஸ் வீதி<br>யாழ்ப்பாணம் |
| தயாபரி இராமலிங்கம் | புத்தூர் கிழக்கு<br>புத்தூர் |
| திருவருட்செல்வி செல்வநாயகம் | நெட்டிளப்பாய்<br>கோண்டாவில் |
| திலகவதி கந்தையா | அல்லாரை வடக்கு<br>கொடிகாமம் |
| திலகேஸ்வரி செல்லையா | வருணன்<br>அச்சுவேலி |
| தேன்மொழியாள் இளையதம்பி | நீலந்தோட்டம்<br>கரவெட்டி மேற்கு<br>கரவெட்டி |
| தேவகி செல்வரட்ணம் | 16, வில்வந்தெருலேன்<br>அரியாலை<br>யாழ்ப்பாணம் |
| நகுலேஸ்வரி வேலுப்பிள்ளை | கிளாலி றோட்<br>எழுதுமட்டுவாள் |
| நவமணிதேவி குலசேகரம் | விடத்தற்பளை<br>மிருசுவில் |
| நகுலேஸ்வரி ஆறுமுகம் | சத்திரந்தை, களபூமி<br>காரைநகர் |
| நந்தினி இராசையா | நாவற்குழி<br>கைதடி |
| நளினகலா கார்த்திகேசு | வண்கலவடி<br>மட்டுவில் வடக்கு<br>சாவகச்சேரி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| மா. நவநீதமணி | "மாறுபுலம்"<br>அல்வாய் வடக்கு<br>அல்வாய் |
| நாகராணி வெற்றிவேல் | பிரம்படிலேன்<br>கொக்குவில் கிழக்கு<br>கொக்குவில் |
| இர்வலன் | மணற்பகுதி<br>'ஸ்ரீ ரஞ்சனி'<br>புத்தூர் |
| பகீரதி விநாயகமூர்த்தி | அச்சுவேலி தெற்கு<br>அச்சுவேலி |
| பரமேஸ்வரி கணபதிப்பிள்ளை | கரம்பை குறிச்சி<br>வரணி |
| பப்சி டொமினிக் | 11/3 மடம் வீதி,<br>யாழ்ப்பாணம் |
| பாக்கியலஷ்மி சுப்பிரமணியம் | சிவன்கோவிலடி<br>ஆவரங்கால்,<br>புத்தூர். |
| பாலசதாமணி பாலசிங்கம் | 'பாலமணி பவனம்'<br>சரவணை மேற்கு,<br>சரவணை. |
| பாலகுமாரி பாலசிங்கம் | வரணி வடக்கு, வரணி |
| புஷ்பலதா சின்னையா | எழுதுமட்டுவாள் தெற்கு<br>எழுதுமட்டுவாள். |
| மங்களா கணபதிப்பிள்ளை | 'சத்திரந்தை'<br>அல்வாய் வடக்கு,<br>அல்வாய். |
| மங்களேஸ்வரி சிற்றம்பலம் | காளிகோவிலடி<br>5ஆம், வட்டாரம் நயினாதீவு |
| மகேஸ்வரி பண்டாரி | மீசாலை தெற்கு<br>சாலியத்தாய், மீசாலை. |
| மகேஸ்வரி பாலகணேசன் | கந்தமுருகேசனார் றோட்<br>புலோலி தெற்கு<br>புலோலி. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| மனோகரி சோமசுந்தரம் | 4ஆம் வட்டாரம்<br>நெடுந்தீவு மேற்கு |
| மாதுமை மகாதேவன் | 3ஆம் கட்டை கல்வியங்காடு<br>யாழ்ப்பாணம் |
| மீனம்பிகை இரசேந்திரம் | கேரதீவு ரோட், நாவற்குழி<br>கைதடி |
| மோகனதேவி துரைசிங்கன் | மீசாலை வடக்கு<br>கொடிகாமம் |
| வாசுகி சுப்பிரமணியம் | சாரையடி, புலோலி<br>தெற்கு, புலோலி |
| விஜிதா தனபாலசிங்கம் | உடையார் வளவு<br>துன்னாலை தெற்கு,<br>கரவெட்டி |
| விஜிதா பாமினி மூத்துலிங்கம் | 87, ஸ்ரான்லி வீதி<br>யாழ்ம்பாணம் |
| யசோதா சின்னையா | சீதாபதி, கோப்பாய்<br>வடக்கு, கோப்பாய் |
| யசோதா இரத்தினசபாபதி | பணிக்கர்வளவு ஒழுங்கை<br>திருநெல்வேலி வடக்கு,<br>யாழ்ப்பாணம் |
| யசோதா மருதலிங்கம் | அச்சுவேலி தெற்கு<br>அச்சுவேலி |
| யோகாம்பிகை சந்திரசேகரம் | குருநாதர் கோயிலடி<br>பொலிகண்டி<br>வல்வெட்டித் துறை |
| யோகமலர் கந்தசாமி | கற்குழி வடக்கு,<br>சாவகச்சேரி. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| ரஞ்சினிதேவி துரைராசா | இலக்குமி இல்லம்<br>அல்வாய் தெற்கு,<br>அல்வாய். |
| ரஜனிதேவி பரமநாதன் | 'சரஸ்வதிவாசா'<br>துன்னாலை தெற்கு,<br>கரவெட்டி. |
| ராதாமணி நடராசா | சரவணை கிழக்கு<br>வேலணை 9 |
| ஸ்ரீவாணி வேலாயுதபிள்ளை | 10, கல்லூரி வீதி,<br>கொக்குவில். |
| ஜஸ்மின் இக்பால் | 4.B, S, ஒழுங்கை,<br>சோனகத் தெரு,<br>யாழ்ப்பாணம். |
| ஜெனற் றஞ்சினி துரைச்சாமி | 2/1, இராசேந்திரா வீதி<br>யாழ்ப்பாணம் |
| ஜெகதீஸ்வரி வல்லிபுரம் | 53, வைத்தியசாலை வீதி<br>மட்டுவில் வடக்கு<br>சாவகச்சேரி |
| ஜெகதீஸ்வரி சுப்பிரமணியம் | கிணற்றடி வைரவர் கோயிலடி<br>புலோலி தெற்கு, புலோலி |
| ஜெயமணி வைத்திலிங்கம் | ஊரெழு கிழக்கு சுன்னாகம் |
| ஜெயபாரதி குமாரசாமி | 260, ஏ. வி. றோட்<br>அரியாலை யாழ்ப்பாணம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''...அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோர் ஏழைக்கெழுத்தறிவித்தல்'

செட்டியார் அச்சகம்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நலமான வாழ்விற்கு நல்லதோர் வழிகாட்டி

## ஷப்ரு

உங்கள் நிதியைப் பெருக்க எங்கள் முதலீட்டுத்திட்டங்களை நாடுங்கள்

## நிலையான வைப்புத் திட்டம்/TERM DEPOST

குறைந்த வைப்புத்தொகை 1000/-
மாதாந்த வட்டிபெற குறைந்த வைப்புத் தொகை 5000/-

| காலம் (மாதம்) | மாதாந்த வட்டிவீதம் | முதிர்ச்சியில் வட்டிவீதம் |
|---|---|---|
| 03 | — | 15% |
| 06 | 15% | 17% |
| 12 | 18% | 20% |
| 24 | 21% | 23% |
| 36 | 22% | 24% |

உங்கள் நிதியைப் பெருக்க மேலும் பல புதிய வழிகள்
ஷப்ரு வின் உதவியை நாடுங்கள்

# ஷப்ரு யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட்

61, நியூ புல்லர்ஸ் வீதி,
கொழும்பு - 4.
தொலைபேசி - 589310-500576

207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி - 22073
(யாழ் முகவர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org